


# பேனாவினால் பேசுவோம்

சிறுவர் கட்டுரைகள் பகுதி – 1

தரம் 3 – 5

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனாவினால்* பேசுவோம்*

## சிறுவர் கட்டுரைகள் பகுதி - 1

## தரம் 3 - 5

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பேனாவினால் பேசுவோம் |
| ஆசிரியர் | : | ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| வகை | : | சிறுவர் கட்டுரைகள் தரம் 3-5 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படம் | : | ச.அ.அருள்பாஸ்கரன். |
| முதற்பதிப்பு | : | 25 - 12 - 2009 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி, உவர்மலை-<br>திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| பதிப்பும் விற்பனையும் | : | லங்கா புத்தகசாலை.<br>F L.1.14 டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-98211-2-0 |
| விலை | : | ரூபாய் 100/= |


## சமர்ப்பணம்

இந்நூல்.............
இந்நூலைப் படித்துப் பயன்பெறும் சிறார்களுக்கும்,
அவர்களது பெற்றோருக்கும், கற்பிக்கும்
ஆசிரியர்களுக்கும் சமர்ப்பணம்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை எழுதுவோம்

நமது தமிழ் மொழி இனிமையானது. சொல்வளம் மிக்கது. ஆனால் நாம் நமது மொழியினைச் சரியாக எழுதமுடியாமல் தவிக்கிறோம். பரீட்சைகளில் கோட்டைவிடுகிறோம். இதற்கான காரணங்கள் யாவை? நமது தாய் மொழிதானே என்று இலக்கணத்தை அல்லது அழகான வழியில் எழுதும் முறையைத் தவறவிடுகிறோம். நமது முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்ற தியாகங்களை மறந்து விடுகின்றோம். மொழி மனிதனின் விழியாகும். மொழியை நன்றாக அறிந்தவர் வாழ்வில் வெற்றியடைவார். மொழியைக் கண்டுபிடித்து நமக்குத் தந்தவர்களை நாம் நினைவில் இருத்தவேண்டும். அவர்கள் நமக்கு எழுத்துக்களையும், சொற்களையும் தந்து, அவற்றை ஒழுங்காக, வசனமாக எழுதும் முறையினையும் தந்துள்ளார்கள்.

மொழிக்கு இலக்கணத்தையும் வகுத்து இலகுபடுத்தியுள்ளார்கள். நாம் அதனை மறந்து நமது வழியில் செல்வதால் தடுக்கி விழுந்து விடுகிறோம். எழுத்துக்களை நன்றாக எழுதப் பழகவேண்டும். எழுத்துக்களின் உச்சரிப்புக்களைப் புரிந்து கொள்ள வேண்டும். எழுத்துக்களை அழகாக எழுதப்பழகவேண்டும். எந்த எழுத்து எந்த இடத்தில் வரவேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு எழுதவேண்டும். இளமையிலேயே எழுதப்பழகிக் கொள்வது நல்லது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை தொடரும். இந்த நூலை எழுதுவதற்குக் காரணம் உள்ளது. இன்றும் படித்தவர்கள் எழுத்துப் பிழைகளை விடுகின்றார்கள். தரமான கட்டுரைகளை எழுத முடியாது திண்டாடுகிறார்கள். இந்த நூலில் இலகுவான நடையில் தொடங்கியுள்ளேன். அத்துடன் சிறிய வசனங்களாகத் தொடங்கியுள்ளேன். பின்னர் பந்திகள் அமைந்த கட்டுரைகளாகத் தந்துள்ளேன்.

இந்த நூலை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களை வாங்கிப் படிக்கும்படி தூண்டவேண்டும். இவ்வகை நூலின் அவசியத்தைப் பல ஆசிரியர்கள் எழுதும்படி என்னை கேட்டுக் கொண்டார்கள். லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு. க. சதீஸ் அவர்களும் இவ்வகைக் கட்டுரை நூலை எழுதும்டி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க இதனை எழுதியுள்ளேன். படித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நூலின் இரண்டாந் தொகுதி விரைவில் வெளிவரும். நீங்கள் படிக்கத் தயார் என்றால் நாங்கள் எழுதி வெளியிடத் தயார். அதற்கு உறுதுணையாக லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு. க. சதீஸ் அவர்கள் உங்களது முன்னேற்றத்தில் கரிசனையாக இருக்கின்றார்கள். நன்கு படியுங்கள்.

ச.அருளானந்தம் (கேணிப்பித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாளர் உரை

தமிழ்மொழி இனிமையானது. ஆனால் நமது சிறார்கள் நமது மொழியில் பாண்டித்தியம் உடையவர்களாக இல்லை.கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஏராளமான மாணவர்கள் சித்தியடையத் தவறிவிடுகிறார்கள். காரணம்? அவர்களுக்கு ஆரம்பத்திலேயே நல்ல பயிற்சிகளைக் கொடுக்காது விட்டமையேயாகும். இதனையிட்டுப் பெற்றோரும், ஆசிரியர்களும் சிந்திக்க வேண்டும். சிறார்களுக்குக் கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்க்க வேண்டும்.

"பேனாவினால் பேசுவோம்" என்ற கட்டுரை நூலை எழுதும்படி நான் திரு.ச.அருளானந்தம் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அதற்கேற்ப அவர் நல்லதொரு கட்டுரை நூலினை எழுதித்தந்துள்ளார். சிறுவர் இலக்கியத்தில் பாண்டித்தியம் உடைய திரு. ச.அருளானந்தம் நல்லதொரு ஆசிரியராகவும், அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும் விளங்கியவர். அவரது கட்டுரைகள் சிந்திக்க வைப்பன. இலகுவான நடையில் நல்ல தமிழில் எழுதியுள்ளார். இந்நூல் 3 - 5 வகுப்பு மாணவர்களை இலக்கு வைத்து எழுதப்பெற்றாலும் மேல் வகுப்பு மாணவர்களுக்கும் பொருத்தமானது.

இப்போது புலமைப் பரிசில் பரீட்சை முக்கியம் பெற்றுள்ளதால் அந்தப் பரீட்சைக்குப் பொருத்தமான தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளன. இந்நூலை நன்கு கற்றுப் பயன்பெற வாழ்த்துகிறோம்.

நன்றி

க. சதீஸ்
முகாமையாளர்
லங்கா புத்தகசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்


| | தலைப்பு | | தலைப்பு |
|---|---|---|---|
| 01 | நான் என்னைப்பற்றி | 31 | நான் பார்த்த கிரகணம் |
| 02 | எனது குடும்பம் | 32 | காலைக் காட்சி |
| 03 | எனது தாத்தா | 33 | மாலைக் காட்சி |
| 04 | எனது அம்மம்மா (பாட்டி) | 34 | மழை நாள் |
| 05 | எனது அப்பா | 35 | எனது ஆசிரியர் |
| 06 | எனது அம்மா | 36 | எனது அதிபர் |
| 07 | எனது அண்ணா | 37 | எனது பாடசாலை |
| 08 | எனது தம்பி | 38 | மரம் நடுவோம் |
| 09 | எனது தங்கை | 39 | சுத்தம் சுகம் தரும் |
| 10 | எனது அக்கா | 40 | சிறுவர் தினம் |
| 11 | எனது மாமா | 41 | முதியோரைப் பேணுவோம் |
| 12 | எனது மாமி | 42 | மின்சாரத்தின் பயன் |
| 13 | எனது வீடு | 43 | கடற்கரையில் நான் |
| 14 | எனது கிராமம் | 44 | எனக்கு வால் முளைத்தால் |
| 15 | எனது நகரம் | 45 | எங்கள் கோயில் திருவிழா |
| 16 | எனது நாடு | 46 | எனது பொழுது போக்கு |
| 17 | எனது நாய்க்குட்டி (செல்லப்பிராணி) | 47 | போக்குவரத்துச் சாதனங்கள் |
| 18 | எங்கள் வீட்டுப் பசு | 48 | நான் செய்த பிரயாணம் |
| 19 | நான் ஒரு பறவையானால் | 49 | விஞ்ஞானத்தின் பயன்பாடு |
| 20 | நான் ஒரு குயிலானால் | 50 | தொலைக்காட்சி |
| 21 | எனது பூந்தோட்டம் | 51 | கணினிப் பயன்பாடு |
| 22 | எனது வீட்டுத்தோட்டம் | 52 | வாசிப்புப் பழக்கம் |
| 23 | நான் வாழும் சூழல் | 53 | சுனாமி |
| 24 | நமக்கு உதவுவோர் | 54 | வானவில் |
| 25 | நான் விரும்பும் நூல் | 55 | ஆகாய விமானம் |
| 26 | நான் விரும்பும் பெரியார் | 56 | எறும்புகள் |
| 27 | நான் விரும்பும் தொழில் | 57 | விளம்பரம் எழுதுவோம் - 1 |
| 28 | நான் விரும்பும் பண்டிகை | 58 | விளம்பரம் எழுதுவோம் - 2 |
| 29 | சூரியன் | 59 | கடிதம் எழுதுவோம் - 1 |
| 30 | சந்திரன் | 60 | கடிதம் எழுதுவோம் - 2 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I. நான் என்னைப் பற்றி




- நான் யாரென்று தெரியுமா? நான்தான் மகாராணி.
- அது எனது அப்பா வைத்த பெயராகும்.
- எனது அப்பா ஒரு ஆசிரியர்.
- அம்மா வீட்டின் எஜமானி.
- நான் தாத்தா பாட்டியின் செல்லப்பிள்ளை.
- எங்கள் வீட்டின் மூத்தபிள்ளை நான்தான்.
- அதனால் மகாராணி என்ற பெயரை வைத்தார்களாம்.
- நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கிறேன்.
- எனக்கு ஒரு தம்பியும், தங்கையும் இருக்கிறார்கள்.
- அதிகாலையில் எழுந்ததும் குளிப்பேன்.
- பூக்களைப் பறித்துக் கடவுளுக்குச் சூட்டுவேன்.
- பெற்றாரை வணங்கிப் பாடம் படிப்பேன்.
- பாடசாலைக்குத் தினமும் செல்வேன்.
- பெரியோர்ரைக் கனம் பண்ணுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாலை முழுதும் நண்பர்களோடு சேர்ந்து விளையாடுவேன்.
- எனது வீட்டில் வீட்டுத்தோட்டம் வைத்துள்ளேன்.
- பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்றுவேன்.
- அவை காற்றில் அசையும்போது மகிழ்வேன்.
- எனக்கு இசையில் ஆர்வம் உண்டு
- நான் நடனமும் ஆடுவேன்.
- கதைகள் எழுதிப் பழகுகிறேன்.
- கதை கேட்பது எனது பொழுதுபோக்காகும்.
- பறவைகளைப் போல் வானில் பறந்து பார்க்க ஆசை.
- இரவில் நட்சத்திரப் பூக்களைப் பார்த்து இரசிப்பேன்.
- அற்புதமான வானம் என்னைப் பிரமிக்க வைக்கும்.

## உ. எனது குடும்பம்



- எனது குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாகும்.
- எனது குடும்பத்தின் தலைவர் தாத்தாதான்.
- அவரது வழிகாட்டலில் அப்பா எங்களை வாழவைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அம்மா குடும்பத்தின் நிதியமைச்சராவார்.
- அம்மா பாட்டியின் அறிவுரைக்கேற்ப நடப்பார்
- அப்பாவும் அம்மாவும் ஆசிரியர்கள்.
- நாங்கள் அனைவரும் பாடசாலைக்குப் போய்விடுவோம்.
- வீட்டில் தாத்தா பாட்டிதான் காவல்.
- அவர்களை நான் நேசிக்கின்றேன்.
- காலை கலகலப்பாக இருக்கும்.
- ஆளுக்கொரு வேலையில் ஆழ்ந்திருப்பார்கள்.
- தாத்தா எங்கள் பசுவில் பால்கறந்து வருவார்.
- பாட்டி பாலைக் காய்ச்சி வைப்பார்.
- அம்மா காலையுணவைச் சமைப்பார்.
- சாப்பிடும்படி தாத்தா எல்லோரையும் வற்புறுத்துவார்.
- ஏழரை மணிக்குப் பாடசாலைக்குப் போய்விடுவோம்.
- மாலை முழுதும் விளையாடுவோம்..
- தோட்டத்துக்குத் தண்ணீர் ஊற்றுவோம்.
- ஆறரை மணிக்கு இறைவனைப் பிரார்த்திப்போம்.
- ஏழு மணிக்குப் படிக்கத் தொடங்குவோம்.
- எட்டரை மணிக்கு ஒன்றாக இருந்து சாப்பிடுவோம்.
- படுக்கையில் கதைப்புத்தகங்கள் வாசிப்போம்.
- பாட்டி அற்புதமான கதைகள் சொல்வார்.
- சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் கொண்டாட்டம்தான்.
- உறவினர் வீடுகளுக்குச் சென்று வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ૩. எனது தாத்தா



- எங்கள் குடும்பத் தலைவர் தாத்தாதான்.
- எனது குடும்பக் கப்பலின் மாலுமியே அவர்தான்.
- எங்களுக்கு தாத்தா வழிகாட்டியாக இருக்கிறார்.
- எனது தாத்தா எங்களை நேசிக்கிறார்.
- எனது தாத்தா அதிகாலையில் உடற்பயிற்சி செய்வார்.
- எழுந்து குளித்தபின் இறைவனை வழிபடுவார்.
- சந்தைக்குப் போய் காய்கறி வாங்கி வருவார்.
- ஓய்வான நேரத்தில் நிறைய வாசிப்பார்.
- கட்டுரை, கவிதை, சிறுகதை என எழுதுவார்.
- எங்களையும் வாசிக்கும்படி சொல்லுவார்.
- வாசிப்பதால் நாம் அறிவினைப் பெறலாம் என்பார்.
- நான் எழுதும்போது உற்சாகப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாலையில் காலாற நடப்பார்.
- விடுமுறை நாட்களில் என்னையும் சந்தைக்கு அழைத்துச் செல்வார்.
- நல்ல கதைப் புத்தகங்களை வாங்கித் தருவார்.
- எனது தாத்தா சிறந்த பண்பாடுடையவர்.
- திருக்குறளை நன்றாகப் படித்துள்ளார்.
- மற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்.
- எல்லாரோடும் இனிமையாகப் பேசுவார்.
- பாரதியாரின் கவிதைகளை வாய்விட்டுப் படிப்பார்.
- எனது தாத்தா நீடூழிவாழ இறைவன் அருள்புரிவானாக.

## 4. எனது பாட்டி (அம்மம்மா)



- எனது குடும்பத்தின் தலைவி பாட்டிதான்.
- அவரே எனது குடும்பத்தின் திசைகாட்டி.
- எங்களுக்குப் பாட்டி வழிகாட்டியாக இருக்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர் எப்போதும் இளமையாகவும் அழகாகவும் இருக்கிறார்.
- அதனால் பாட்டியை அம்மம்மா என அழைக்கிறோம்.
- அப்படி அவரை அழைப்பதில் அவருக்கு இன்பம்.
- எனது அம்மம்மா எங்களை நேசிக்கிறார்.
- எனது பாட்டி அதிகாலையில் எழுந்து வீட்டைச் சுத்தம் செய்வார்.
- வேலைகளை முடித்துக் குளிப்பார்.
- என்னையும் குளிப்பாட்டி விடுவார்.
- பாட்டியோடு சேர்ந்து இறைவனை வழிபடுவோம்.
- எனது பாட்டியும் ஆசிரியராக இருந்தவர்.
- ஓய்வான நேரத்தில் நிறைய வாசித்துக் கதைசொல்வார்.
- பாட்டியைச் சூழ்ந்திருந்து கதை கேட்போம்.
- எங்களையும் கதை சொல்லச் சொல்லுவார்.
- நான் எழுதும்போது உற்சாகப்படுத்துவார்.
- மாலையில் தோட்டத்தில் தண்ணீர் ஊற்றுவார்.
- ஒவ்வொரு செடியையும் வருடிவிடுவார்.
- அவற்றுக்கு எருவிட்டு அழகு பார்ப்பார்.
- விடுமுறை நாட்களில் என்னையும் கடற்கரைக்கு அழைத்துச் செல்வார்.
- நல்ல கதைப் புத்தகங்களை படிக்கும்படி கூறுவார்.
- எனது பாட்டி நீடூழிவாழ இறைவன் அருள்புரிவானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௫. எனது அப்பா



- எனது அப்பா மிகவும் நல்லவர்.
- எனது அப்பா ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.
- அவர் மாணவர்களோடு அன்பாகப் பழகுவார்.
- பாடசாலைக்கு நேரந்தவறாமல் செல்வார்.
- எங்களுக்குப் பாசத்தோடு அறிவுரைகளையும் வழங்குவார்.
- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பார்கள்.
- அப்பாதான் எனது கண்கண்ட தெய்வம்.
- தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லையாம்.
- அவரது சொற்களை மந்திரமாகக் கேட்போம்.
- அவரது அறிவுரைகள் பயனுள்ளவையாக இருக்கும்.
- அவர் பாரதியாரையும் வள்ளுவரையும் படிப்பார்.
- அப்பா இசையை இரசித்துக் கேட்பார்.
- அவர் எங்களை எழுதும்படி தூண்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எழுதியவற்றைப் படித்துத் திருத்தித் தருவார்.
- மாலையில் எங்களோடு துடுப்பாடுவார்.
- கிளித்தட்டு விளையாடுவதில் அப்பா வல்லவர்.
- தேசிய விளையாட்டுக்கள் உடலுக்கு வலுவைத் தருவனவாம்.
- எங்களோடு சேர்ந்து வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு நீரிறைப்பார்.
- தனது தாய்தந்தையரை வணங்கி அன்றைய நாள் வேலைகளைத் தொடங்குவார்.
- செயன்முறைக் கற்றலில் எங்களை ஈடுபடுத்துவார்.
- சமய அனுட்டானங்களைப் பின்பற்றத் தூண்டுவார்.

## 6. எனது அம்மா



- எனது அம்மா மிகவும் அன்புள்ளம் கொண்டவர்

எனது அம்மா சிறந்த குடும்பப் பெண்ணாவார்.

அவர் குடும்ப அங்கத்தவர்களோடு அன்பாகப் பழகுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நேரந்தவறாமல் பாடசாலைக்கு செல்வதற்கு உதவுவார்.
- எங்களுக்கு பாசத்தோடு அறிவுரைகளையும் வழங்குவார்.
- எனது அம்மா அனைவரோடும் கனிவாகப் பேசுவார்
- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பார்கள்.
- தாயிற் சிறந்த கோயிலும் இல்லை என்று சொல்வார்கள்.
- அம்மாதான் எனது கண்கண்ட தெய்வம்.
- அவரது அறிவுரைகள் பயனுள்ளவையாக இருக்கும்.
- எனது அம்மா வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பார்.
- பா்ரதியாரையும் வள்ளுவரையும் விரும்பிப் படிப்பார்.
- அம்மா இசையையும் நடனத்தையும் ரசிப்பார்.
- அவர் ஒவ்வொரு நாளும் எழுதும்படி தூண்டுவார்.
- எழுதியவற்றைப் படித்துத் திருத்தித் தருவார்.
- மாலையில் எங்களோடு சேர்ந்து பூப்பந்தாடுவார்.
- வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு நீரிறைப்பார்.
- தனது தாய்தந்தையரை வணங்கிக் கடமைகளைத் தொடங்குவார்.
- செயன்முறைக் கற்றலில் எங்களை ஈடுபடுத்துவார்.
- சமய அனுட்டானங்களைப் பின்பற்றத் தூண்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. எனது அண்ணா




- எனது அண்ணாதான் எங்கள் வீட்டின் இளவரசன்.
- அண்ணாமேல் அனைவரும் அன்புபாராட்டுவோம்.
- எனது அண்ணா சிறந்த துடுப்பாட்ட வீரன்.
- எங்களுக்குப் பாடம் சொல்லித் தருவார்.
- எந்த நேரமும் சுறுசுறுப்பாகவே இயங்குவார்.
- அண்ணா க.பொ.த (சா / த) வகுப்புப் படிக்கிறார்.
- காலையில் தாத்தாவோடு நடைபயில்வார்.
- தாத்தாவின் மெய்ப்பாதுகாவலர் அண்ணாதான்.
- அண்ணா அழகான கவிதைகளை எழுதி வாசிப்பார்.
- அண்ணாதான் அவரது வகுப்பின் தலைவராவார்.
- பெரியவர்களைக் கனம் பண்ணுவதில் சமத்தர்.
- பிறருக்கு உதவி செய்வதில் பின்வாங்க மாட்டார்.
- சாரணியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்.
- பாடசாலை அணித்தலைவர்களில் அண்ணாவும் ஒருவர்.
- எனது அண்ணா படிப்பிலும் கெட்டிக்காரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீச்சல் போட்டியில் பங்குபற்றிப் பரிசுகளைப் பெற்றுள்ளார்.
- எங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்குத் தண்ணீர் இறைப்பார்.
- எங்கள் பசுக்களுக்கு உணவு கொடுப்பது அவரது கடமையாகும்.
- சைக்கிள் ஓடுவது அவரது பொழுது போக்கு ஆகும்.
- அண்ணாவுக்கு நிலாச் சோறு மிகவும் பிடிக்கும்.
- அண்ணாவோடு விளையாடுவது எனக்கு மிகவிருப்பாகும்.
- அண்ணா எனக்குக் கணினி சொல்லித் தருவார்.
- அண்ணாவோடு சேர்ந்து ஓவியம் வரைவோம்.

## 8. எனது தம்பி



- எனது தம்பி எங்கள் வீட்டுச் செல்லப்பிள்ளை.
- எனது தம்பிமேல் அனைவரும் அன்பு காட்டுவோம்.
- எனது தம்பி சிறந்த துடுப்பாட்ட வீரன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- எடுபிடி வேலைசெய்வதில் தம்பி கெட்டிக்காரன்.
- எந்த நேரமும் சுறுசுறுப்பாகவே இயங்குவான்.
- எனது தம்பி நான்காம் வகுப்புப் படிக்கிறார்.
- காலையில் தாத்தாவோடு விளையாடுவான்.
- தாத்தாவின் சேவையாளன் தம்பிதான்.
- தம்பி அழகாகக் கட்டுரைகளை எழுதி வாசிப்பார்.
- தம்பிதான் அவரது வகுப்பின் முதற்பிள்ளை.
- பெரியவர்களைக் கனம் பண்ணுவதில் சமத்தர்.
- பிறருக்கு உதவி செய்வதில் பின்வாங்க மாட்டார்.
- சாரணியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்.
- எனது தம்பி படிப்பிலும் கெட்டிக்காரர்.
- விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றிப் பரிசுகளைப் பெற்றுள்ளார்.
- எங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்குத் தண்ணீர் இறைப்பார்.
- எங்கள் பசுக்களுக்கு உணவு கொடுப்பது அவரது கடமையாகும்.
- தம்பியின் பொழுது போக்கு முத்திரை சேகரிப்பதாகும்.
- எல்லோரும் சேர்ந்து நிலாச்சோறு உண்பது மிகவும் பிடிக்கும்.
- அண்ணாவோடு விளையாடுவது அவனுக்கு மிகவிருப்பாகும்.
- தம்பி கணினியை இயக்கி வித்தை காட்டுவான்.
- தம்பி தும்பி பிடித்து விளையாடுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. எனது தங்கை



- எனது தங்கைதான் எங்களது கடைக்குட்டி.
- எனது தங்கைமேல் எல்லோரும் அன்பு காட்டுவோம்.
- எனது தங்கை சிறந்த பாடகியாவாள்.
- அம்மாவுக்கு உதவுவதில் தங்கை கெட்டிக்காரி.
- எந்த நேரமும் சுறுசுறுப்பாகவே இயங்குவாள்.
- எனது தங்கை மூன்றாம் வகுப்புப் படிக்கிறாள்.
- மாலையில் பாட்டியோடு விளையாடுவாள்.
- பாட்டியின் தோழி எனது தங்கைதான்.
- தங்கை இனிமையாகப் பாட்டுப் பாடுவாள்..
- தங்கை முதியவர்களைக் கனம் பண்ணுவாள்.
- பிறருக்கு உதவி செய்வதில் பின்வாங்க மாட்டாள்.
- மாணவமன்றத்தில் அதிக ஈடுபாடு கொண்டவள்.
- எனது தங்கை படிப்பிலும் கெட்டிக்காரி.
- விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்வாள்.
- எங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்குத் தண்ணீர் இறைப்பாள்.
- எங்கள் பசுக்கன்றுகளோடு விளையாடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீட்டை அலங்கரிப்பதே தங்கையின் பொழுது போக்கு
- அவளுக்கு எல்லோரும் சேர்ந்து நிலாச்சோறு உண்பது மிகவும் பிடிக்கும்.
- சேர்ந்து விளையாடுவது அவளுக்கு மிகவிருப்பமாகும்.
- பூனைதான் தங்கையின் செல்லப்பிராணி.
- குயிலைப் போல் கூவிக்காட்டுவாள்.
- மயிலைப் போல் ஆடிக்காட்டுவாள்.
- நன்றாக நாடகம் நடித்துக் காட்டுவாள்.
- பிறரைப் போலச் செய்வதில் கெட்டிக்காரி.

## 10. எனது அக்கா

- எனது அக்கா எங்கள் வீட்டின் இளவரசி.
- எனது அக்காமேல் எல்லோரும் அன்பு காட்டுவோம்.
- எனது அக்கா சிறந்த நாட்டியதாரகை ஆவாள்.
- அம்மாவுக்கு உதவுவதில் அக்கா கெட்டிக்காரி.
- எந்த நேரமும் சுறுசுறுப்பாகவே இயங்குவாள்.
- எனது அக்கா பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கிறாள்.
- மாலையில் என்னோடு சேர்ந்து விளையாடுவாள்.
- பாட்டியின் தோழி எனது அக்காதான்.
- அக்கா இனிமையாகப் பாட்டும் பாடுவாள்.
- அக்கா முதியவர்களைக் கனம் பண்ணுவாள்.
- பிறருக்கு உதவி செய்வதில் பின்வாங்க மாட்டாள்.
- மாணவமன்றத்தில் அதிக ஈடுபாடு கொண்டவள்.
- எனது அக்கா படிப்பிலும் கெட்டிக்காரி.
- விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்வாள்.
- எங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்குத் தண்ணீர் இறைப்பாள்.
- எங்கள் பசுக்கன்றுகளோடு விளையாடுவாள்.
- வீட்டை அலங்கரிப்பதே அக்காவின் பொழுது போக்கு
- அவளுக்கு எல்லோரும் சேர்ந்து நிலாச்சோறு உண்பது மிகவும் பிடிக்கும்.
- கூட்டாஞ்சோறு சமைத்து விளையாடுவது அவளுக்கு மிகவிருப்பமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குயிலைப் போல் கூவிக்காட்டுவாள்.
- மயிலைப் போல் ஆடிக்காட்டுவாள்.
- நன்றாக நாடகம் நடித்துக் காட்டுவாள்.
- மற்றவர்களைப் போலச் செய்வதில் அக்கா கெட்டிக்காரி.
- எனது அக்கா எனக்குவாய்த்த அருஞ்செல்வமாவாள்.

## 11. எனது மாமா



- எனது மாமா மிகவும் நல்லவர்.
- அவர் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.
- அவர் ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் அன்பாகப் பழகுவார்.
- பாடசாலைகளுக்கு நேரந்தவறாமல் செல்வார்.
- அனைவருக்கும் பாசத்தோடு அறிவுரைகளை வழங்குவார்.
- எனது மாமா கதைப்புத்தகங்களை வாங்கித்தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவரது அறிவுரைகளை மந்திரமாகக் கேட்போம்.
- அவரது அறிவுரைகள் பயனுள்ளவையாக இருக்கும்.
- அவர் பாரதியாரையும் வள்ளுவரையும் படிக்கும்படி கூறுவார்.
- மாமா இசையை ரசித்துக் கேட்பார்.
- அவர் ஒரு இசைப்பிரியர்.
- எங்களைப் பாட்டுப் பாடத்தூண்டுவார்.
- மாலையில் எங்களோடு துடுப்பாடுவார்.
- வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு நீரிறைப்பார்.
- தனது தாய்தந்தையரை வணங்கி நாளைத் தொடங்குவார்.
- செயன்முறைக் கற்றலில் எங்களை ஈடுபடுத்துவார்.
- சமய அனுட்டானங்களைப் பின்பற்றத் தூண்டுவார்.
- வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கத் தூண்டுவார்
- மாமாவின் அன்பு எங்களை மகிழச் செய்துவிடும்

## 12. எனது மாமி


- எனது மாமி மிகவும் அன்புள்ளம் கொண்டவர்
- எனது மாமி அம்மாவைப்போல் சிறந்த குடும்பப் பெண்ணாவார்.
- அவர் குடும்ப அங்கத்தவர்களோடு அன்பாகப் பழகுவார்.
- எனது மாமி ஒரு இசையாசிரியர்.
- நேர்த்தியாகப் பாடி எங்களை பாடவைப்பார்
- எங்களுக்கு பாசத்தோடு அறிவுரைகளையும் வழங்குவார்.
- எனது மாமி அனைவரோடும் கனிவாகப் பேசுவார்
- மாமாவும் மாமியும் எங்களுடைய செல்வங்கள்.
- அவர்களைப் பெற நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்.
- அவர்களது அறிவுரைகள் பயனுள்ளவையாக இருக்கும்.
- எனது மாமி வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பார்.
- பாரதியாரையும் வள்ளுவரையும் விரும்பிப் படிப்பார்.
- மாமி இசையையும் நடனத்தையும் விரும்பி இரசிப்பார்.
- அவர் ஒவ்வொரு நாளும் இசைப்பயிற்சியில் ஈடுபடுவார்.
- பாடும்படி தூண்டி அன்பாக வழிகாட்டுவார்.
- மாலையில் எங்களோடு சேர்ந்து விளையாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு நீரிறைப்பார்.
- தனது தாய்தந்தையரை வணங்கி நாளைத் தொடங்குவார்.
- செயன்முறைக் கற்றலில் எங்களை ஈடுபடுத்துவார்.
- சமய அனுட்டானங்களைப் பின்பற்றத் தூண்டுவார்.

## 13. எனது வீடு



- எனது வீடு எங்களைக் காப்பாற்றுகிறது.
- வரவேற்பு மண்டபமும் அடுக்களையும் உண்டு.
- மண்டபத்தில் புத்தக அலுமாரிகள் உள்ளன.
- படிப்பதற்காக மேசை கதிரைகள் உள்ளன.
- எனது வீட்டில் மூன்று படுக்கை அறைகள் உண்டு.
- கல்லும் மண்ணும் கொண்டு கட்டப்பட்டது.
- வீட்டின் கூரை ஓட்டினால் வேயப்பட்டுள்ளது
- எனது பெற்றோரின் உழைப்பினால் உருவானது.
- எனது வீடு எங்களைப் பாதுகாக்கிறது.
- நல்ல சுகாதார வசதியோடு கட்டப்பட்டது.
- சுற்றிவர யன்னல் கதவுகள் உண்டு.
- சுத்தமான காற்று உள்ளே நுழைந்து வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எனது வீட்டைச் சுற்றித் தோட்டமுண்டு.
- எங்கள் வீட்டில் நாங்கள் ஆறுபேர் வாழுகிறோம்.
- எங்கள் அப்பாதான் வீட்டின் தலைவர்.
- அம்மா வீட்டின் முகாமையாளராவார்.
- எனது அண்ணா வீட்டின் இளவரசனாவான்.
- அழகான படங்கள் சுவர்களை அலங்கரிக்கும்.
- வீட்டின் ஒருபுறம் கிணறு உள்ளது.
- வீட்டைச் சுற்றிப் பூந்தோட்டம் உள்ளது.
- பூந்தோட்டத்தில் பூக்கள் காற்றில் ஆடும்.
- பூவாசம் வீட்டினுள்ளும் பரந்து வரும்.
- எனது வீடுதான் எனது சொர்க்கமாகும்.

## 14. எனது கிராமம்



- கன்னியா எனது கிராமம் ஆகும்.
- அது அழகான சூழலில் அமைந்துள்ளது.
- அங்கு ஏழு வெந்நீர்க் கிணறுகள் உள்ளன.
- ஒவ்வொன்றும் வெவ்வேறான வெப்பமுடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இக்கிணற்று நீர் மருத்துவ சக்தியுடையது.
- இந்நீரில் குளித்தால் சில நோய்கள் தீருமாம்.
- அவற்றைப் பார்ப்பதற்காக மக்கள் வருவார்கள்.
- எனது கிராமம் வரலாற்றுப் பெருமை மிக்கது
- இக்கிணறுகள் இராவணனால் உருவானதாகக் கூறுவர்.
- திருகோணமலை நகரிலிருந்து மேற்காக உள்ளது.
- நகரிலிருந்து எட்டுக் கி.மீ. தொலைவில் உள்ளது.
- அனுராதபுரம் செல்லும் வீதி கன்னியாவின் ஊடாகச் செல்கிறது.
- எனது கிராமத்தில் குறிஞ்சியும் மருதமும் கொஞ்சி விளையாடும்.
- எனது கிராமத்து மக்கள் விவசாயம் செய்வார்கள்.
- பாடசாலை பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- எனது கிராமம் பலமுறை வன்செயலினால் பாதிக்கப்பட்டுள்ளது.
- நாங்களும் அகதிகளாகி கிராமத்தை விட்டோடினோம்.
- இப்போது மீண்டும் வந்து குடியமர்ந்துள்ளோம்.
- இந்த ஊரில் குடியிருக்கக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

## 15. எனது நகரம்



- நான் திருகோணமலையில் வாழ்கிறேன்.
- திருகோணமலை எனது நகரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருகோணமலை கிழக்கு மாகாணத்தின் தலைநகராகும்.
- குடிகளை நெருக்கிப் பெருக்கமாய் அமைந்துள்ளது.
- திருகோணமலை பாடல் பெற்ற திருத்தலமாகும்.
- திருஞானசம்பந்தரும். சுந்தரரும் தேவாரப் பாடல்கள் பாடினார்கள்.
- திருக்கோணேஸ்வரம் இங்குதான் உள்ளது.
- இராவணன் வெட்டு கோயிலையண்டி உள்ளது.
- பாவநாச தீர்த்தமும் அருகே இருக்கிறது.
- மூவின மக்களும் இங்கு வாழ்கிறார்கள்.
- இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது.
- துறைமுகத்துக்குப் பலநாட்டுக் கப்பல்களும் வந்துபோகும்
- இங்கு கடற்படைத் தளம் அமைந்துள்ளது.
- விமானப் படைத்தளமும் இங்குண்டு.
- திருகோணமலை முக்கியத்துவம் வாய்ந்த நகராகும்.
- போத்துக்கீசரால் கட்டப்பட்ட கோட்டை உள்ளது.
- அதனையே ஆங்கிலேயர் திருத்தியமைத்தார்கள்.
- திருக்கோணேஸ்வரத்தை போத்துக்கீசர் இடித்தழித்தனர்.
- கோயிலின் கற்களைக் கொண்டே கோட்டையைக் கட்டினார்களாம்.
- கன்னியா வெந்நீர் ஊற்று நகரத்தை அண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. எனது நாடு




- இலங்கை எனது இனிய நாடாகும்.
- இலங்கை இந்து சமுத்திரத்தில் உள்ள தீவாகும்
- எனது நாடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது.
- மூவின மக்களும் வாழும் நாடாகும்.
- இதனை இரத்தினத்துவீபம் என அழைப்பார்கள்.
- எனது நாட்டின் அமைப்பு மிகவும் அழகானது.
- மத்தியில் உயர்ந்த மலை நாட்டைக் கொண்டு உள்ளது.
- கரையோரம் சமவெளியினைக் கொண்டது.
- நெற் செய்கை பிரதான தொழிலாகும்.
- நெல்லோடு வேறு தானியங்களும் விளைகிறது.
- தென்னை எனது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியம் பெறுகிறது.
- தெங்குப் பொருள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- மலைநாட்டில் தேயிலை, கொக்கோ, கோப்பி பயிராகிறது.
- இவற்றை பணப்பயிர்கள் என அழைப்பார்கள்.
- மலைநாட்டிலிருந்து வற்றாத நதிகள் உற்பத்தியாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எனது நாட்டில் பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன.
- நீர்வீழ்ச்சிகள் நீர்மின்சாரம் உற்பத்திக்கு உதவுகின்றன.
- அரசு பலநீர்த்தேக்கங்களை உருவாக்கியுள்ளது.
- அதனூடாக விவசாயத்தைப் பெருக்குகிறது.
- எனது நாடு ஒரு விவசாய நாடாகும்.

## 17. எனது செல்லப்பிராணி



- எனக்கு இரண்டு செல்லப்பிராணிகள் உள்ளன.
- அழகன் நான் வளர்க்கும் நாய்க்குட்டி.
- கும்புவி எனது பூனைக்குட்டியாகும்.
- நாயும் பூனையும் சண்டை பிடிக்குமாம்.
- எனது செல்லப் பிராணிகள் சண்டைபிடிப்பதில்லை.
- இரண்டும் ஒற்றுமையாக விளையாடும்.
- பாடசாலைக்கு நான் புறப்படுவேன்.
- படலைவரை வந்து வழியனுப்பும்.
- நான் வரும்வரை படலையில் காவலிருக்கும்.
- அழகன் வீட்டைக் காவல் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கும்புவி எலிகளை விரட்டிவிடும்.
- கள்வர் தொல்லையும் எலித்தொல்லையும் இல்லை.
- பந்தை நான் எறிந்தால் கும்புவி காலால் நகர்த்தும்.
- அழகன் கௌவிக் கொண்டு வரும்
- எனது நண்பர்களை இனங்கண்டு செய்தி தெரிவிக்கும்.
- தனித்தனிப் பாத்திரங்களில் உணவை வைப்பேன்.
- சிலநேரம் ஒருபாத்திரத்தில் இரண்டும் உண்ணும்.
- மாலை நேரம் என்னோடு இரண்டும் விளையாடும்.
- நான் படிக்கும்போது அழகனும், கும்புவியும் காவலிருக்கும்.
- நான் வளர்க்கும் செல்லப்பிராணிகள் எனக்கு உதவுகின்றன.

## 18. எங்கள் வீட்டுப் பசு




- எங்கள் வீட்டுப் பசு மிகச்சாதுவானது.
- அதன் பெயர் லக்சுமி
- லக்சுமி என்றால் திரும்பிப் பார்க்கும்.
- அழகான இரண்டு கொம்புகள் உள்ளன.
- அதிகாலையில் கன்றை அன்போடு அழைக்கும்.
- அப்பா பாலைக் கறப்பார்.
- அம்மா காய்ச்சித் தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பால் நல்ல சுவையான சத்துள்ள உணவாகும்.
- பசு புல்லை மேய்ந்து பாலைத் தருகிறது.
- பசுவினால் பல பயன்களை அனுபவிக்கிறோம்.
- காலையும் மாலையும் பால் தருகிறது.
- பாலிலிருந்து தயிர், நெய் முதலியன கிடைக்கும்.
- எங்கள் வீட்டுப்பசு நாங்கள் கொடுக்கும் உணவை உண்ணும்
- அம்மா பசுவை அன்பாகப் பாதுகாக்கின்றார்.
- எங்கள் பசு எங்களது குடும்பச் சொத்தாகும்.
- பசுவின் சாணம் பசளையாகிறது.
- பசளை தோட்டப்பயிர்களுக்கு உரமூட்டுகிறது.
- வெள்ளி தோறும் சாணத்தைக் கரைத்துத் தெளிப்பார்கள்.
- கன்னிப்பசுவின் சாணத்தை எரித்துத் திருநீற்றைப் பெறுகிறோம்.
- திருநீறும் சிறந்த தொற்று நீக்கியாகும்.

## 19. நான் ஒரு பறவையானால்



- நான் பறவையாக உருமாறிப் பார்க்கிறேன்.
- எனது உலகம் அழகானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதனைச் சுற்றிப் பார்க்க ஆசையாக இருக்கிறது.
- எனது சிறகுகளை விரிக்கிறேன்.
- கால்களை உள்ளிழுத்துப் பறக்கிறேன்.
- எனக்குக் கீழ் உலகம் அற்புதமாக இருக்கிறது.
- மரக்கிளைகளைத் தொட்டு அளைகிறேன்.
- கனிகளை எனது கூரிய அலகினால் கோதி உண்கிறேன்.
- இலை, தளிர் சுவையாக இருக்கிறது.
- எனது குரலிலும் வித்தியாசத்தை உணர்கிறேன்.
- எனக்கு அழகிய தோகைபோன்ற வாலிருக்கிறது.
- பறக்கும்போது வாலை அசைத்தால் வேண்டிய பக்கம் போகலாம்.
- அலகினால் சுள்ளிகளை எடுத்துக் கூடு கட்டுகிறேன்.
- சமைக்கத் தேவையில்லை.
- காசு பணம் தேவையில்லை.
- சொத்துச் சுகம் எனக்குத் தேவையில்லை.
- உற்றார் உறவினர்களுடன் பாடிப் பறக்கிறேன்.
- வானில் சிறகடித்துப் பறப்பது அற்புதமானது.
- போட்டி பொறாமையில்லாத உலகத்தில் பறக்கிறேன்.
- அதிகாலையில் எழுந்து விடுகிறேன்.
- உண்பதும் உல்லாசமாய் இருப்பதற்கும் பறவையாகுங்கள்.
- சொத்துச் சேர்த்து வைக்கத் தேவையில்லை.
- களவு பொய் இல்லாத வாழ்க்கையை அனுபவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. நான் ஒரு குயிலானால்



- நான் ஒரு குயிலானால் எப்படி இருப்பேன்.?
- கருமையான உடலுடன் சிவந்த கண்களும் இருக்கும்.
- பறப்பதற்குச் சிறகுகள் இருக்கும்.
- அதிகாலையில் எழுந்து குரலெடுத்துக் கூவுவேன்.
- இனிமையான இசையில் மக்களை மகிழ்விப்பேன்.
- என்னை வளர்த்துவிட்ட செவிலித்தாய்க்கு நன்றி கூறுவேன்.
- கூடு கட்டி வாழக் கற்றுக் கொள்வேன்.
- எனது கூட்டுக்குள் முட்டைகளை இடுவேன்.
- அடைகாத்துக் குஞ்சுகளைப் பொரிப்பேன்.
- நானே உணவூட்டிப் பாதுகாப்பேன்.
- அவற்றுக்குப் பறவைகாட்டி வளர்ப்பேன்.
- இதனால் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைப்பேன்.
- "காகம் கூடுகட்ட குயில் முட்டையிடும்" என்ற வசையை இல்லாதொழிப்பேன்.
- காலையும் மாலையும் களிப்புடன் கூவுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழந்தைகளின் உள்ளங்களைக் கவர்ந்திழுப்பேன்.
- கவிஞர்களைக் கற்பனையில் ஆழ்த்துவேன்.
- இராமனது உடல் கறுப்பு, எனது உடலும் கறுப்பு.
- இராமனுக்குச் சிவந்த கண்கள் எனக்கும் சிவந்த கண்கள்.
- இராமனும் நானும் ஓரினம் என்று கூவுவேன்.

## 21. எனது பூந்தோட்டம்




- எனது பூந்தோட்டத்தில் பலவகையான பூஞ்செடிகள் உள்ளன.
- வண்ணப்பூக்கள் மனதுக்கு இன்பத்தை ஊட்டும்
- எனது பூந்தோட்டம் பார்ப்போருக்குப் பூரிப்பை ஏற்படுத்தும்.
- பூஞ்செடிகளில் பூக்கள் நிறைந்தாடும்.
- காலையிலும் மாலையிலும் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றுவேன்.
- பூஞ்செடிகளின் தேவையறிந்து பசளையிடுவேன்.
- பூந்தோட்டத்தினுள் களைகளைக் கண்டறிந்து களைவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவையற்ற செடிகொடிகள் களைகளாகும்.
- களை என்பது களையவேண்டியவை.
- அவை தேவையில்லாத பயிர்களாகும்.
- எனது பூந்தோட்டத்தில் பலவண்ண மலர்கள் உள்ளன.
- பல பூக்கள் ஐந்து இதழ்களைக் கொண்டிருக்கின்றன.
- சில பூக்கள் பலஅடுக்குகள் கொண்டுள்ளன.
- ரோஜா பலஅடுக்குகள் கொண்டதாக இருக்கும்.
- நித்திய கல்யாணி ஐந்து இதழ்களைக் கொண்டிருக்கும்
- சில பூக்களில் ஏழு இதழ்களும் உண்டு.
- காலையில் பூந்தோட்டத்தில் வேலை செய்வது சந்தோசமானது.
- அம்மாவும், அப்பாவும் எனக்கு உதவுவார்கள்.
- காலையில் பூக்களைப் பறித்துக் கடவுளுக்குச் சூட்டுவேன்.

## 22. எனது வீட்டுத்தோட்டம்



- வீட்டிலே உள்ள தோட்டமே வீட்டுத் தோட்டமாகும்
- எனது வீட்டைச் சுற்றி தோட்டம் வைத்துள்ளோம்.
- எனது தோட்டத்தில் பலவகைத் தாவரங்கள் உள்ளன.
- மா, பலா, வாழை எனக் கனிதரு மரங்கள் உள்ளன.
- எல்லாவகையான மரக்கறிப் பயிர்களும் உண்டு.
- எங்களுக்குத் தேவையான மரக்கறிவகைகள் எனது தோட்டத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றன.

- எனது தோட்டத்தில் வேலைசெய்வது சந்தோசமானது.
- கத்தரிச் செடியில் அழகான காய்கள் தொங்கும்.
- தக்காளி, காயும் கனியுமாய் படுத்திருக்கும்.
- பந்தல்களில் பாகல், புடோல் தொங்கும்.
- பூசனிக் கொடி காய்களுடன் அடைகாக்கும்.
- நிலம் வரை படர்ந்து பூத்துக் காய்த்திருக்கும்
- குலைகளைத் தள்ளி வாழை நாணிநிற்கும்.
- தென்னைகளில் பாளை வெடித்துச் சிரிக்கும்
- கீரைவகை செழித்து மேடைகளில் அசையும்
- மரவள்ளி நிலத்தினுள் கிழங்கினை மறைத்துக் கொள்ளும்.
- வற்றாளை படர்ந்து கிழங்கு தரும்
- ஒவ்வொரு வீட்டிலும் தோட்டம் வைக்கவேண்டும்.
- நமது பொருளாதாரத்தை நாமே பெருக்குவோம்.
- எனது பொழுதுபோக்கு தோட்டத்தில் வேலைசெய்வதுதான்.
- வீட்டுத் தோட்டத்தால் நல்ல பயன் கிடைக்கிறது.

## 23. நான் வாழும் சூழல்



- நம்மைச் சூழவுள்ளதெல்லாம் சூழலாகும்.
- நம்மைச்சூழ விலங்குகளும், தாவரங்களும் உள்ளன.
- நாம் வாழும் வீடு, கட்டிடங்களும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வானும், கடலும் காற்றும் நம்மைச் சூழ்ந்துள்ளன.
- நான் வாழும் சூழல் பரபரப்பானது.
- எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும்.
- வாகனங்களின் இரைச்சல் காதுகளை அடைக்கும்.
- வளியில் தூசிதுணிக்கைகள் கலந்திருக்கும்.
- தொழிற்சாலைகளின் கழிவுகள் நிறைந்திருக்கும்.
- குப்பை கூளங்கள் வீதிகளில் குவிந்திருக்கும்.
- அவற்றைச் சுத்தமாக்கச் சிரமதானம் செய்கிறோம்.
- வீடுகளில் சுத்தம் பேணுவதை வற்புறுத்துகிறோம்.
- கழிவுப் பொருட்களை நீக்கி வருகிறோம்.
- குப்பைகளைப் பெருக்கிக் குழிகளில் போடுகிறோம்.
- பொலித்தீன் தவிர்ந்த ஏனையவற்றைப் பசளையாக்குகிறோம்.
- பசளை வீட்டுத்தோட்டத்துக்கு உரமாகிறது.
- மழைக் காலங்களில் நீர்தேங்காதவாறு வடிகால் அமைத்துள்ளோம்
- வீடு சுத்தம் கண்டால் சூழல் சுத்தமாகும்.
- சூழல் சுத்தம் கண்டால் நாடு நாலமாய் இருக்கும்.

## 24. நமக்கு உதவுவோர்



- மனிதன் ஒரு சமூகப் பிராணி.
- அவனால் தனித்து வாழமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆளுக்காள் உதவியாக வாழவேண்டும்.
- நாம் வாழும் சமூகம் ஒரு கட்டமைப்பைக் கொண்டது.
- ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயலைச் செய்கிறோம்.
- ஒருவர் செய்யும் செயல் மற்றவருக்கு உதவுகிறது.
- பசித்தவனுக்கு உணவளிக்க ஒருவர் வேண்டும்.
- உடல்நலமற்றவருக்கு வைத்தியம் செய்ய ஒருவர் வேண்டும்.
- ஒருவர் தமது செய்தியை அஞ்சல் மூலம் அனுப்புகிறார்.
- அதனைத் அஞ்சல் அலுவலர் கொண்டுபோய்க் கொடுக்கிறார்.
- ஆசிரியர் பாடங்களைக் கற்பிக்கின்றார்.
- கிராம சேவையாளர் மக்களுக்கு உதவுகிறார்.
- வழக்குகளை விசாரித்து நீதிபதி நீதியை வழங்குகிறார்.
- மரக்கறி வகைகளை வியாபாரி நமக்குத் தருகிறார்.
- கடைக்காரர் பொருட்களைத் தருகிறார்.
- விவசாயி விளைபொருட்களை விளைவித்துத் தருகிறார்.
- சாரதிகள் வாகனங்களைச் செலுத்தி உதவுகிறார்கள்.
- தனியாகவும், கூட்டாகவும் நமக்குப் பலர் உதவுகிறார்கள்.
- நாமும் பிறருக்கு உதவுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. நான் விரும்பும் நூல்




- நான் விரும்பும் நூல் திருக்குறளாகும்.
- திருவள்ளுவர் குறள் வெண்பாவால் திருக்குறளை இயற்றியுள்ளார்.
- திருக்குறளைப் பொது மறை என்பார்கள்.
- பல மொழிகளில் திருக்குறள் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்கள் உள்ளன.
- மூன்று பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது.
- அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனவாகும்.
- அதனை முப்பால் நூல் என்றும் அழைப்பார்கள்.
- நூற்று முப்பத்திமூன்று அதிகாரங்கள் உள்ளன.
- ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறள்கள் உள்ளன.
- இரண்டு வரிகளில் ஏழு சொற்களைக் கொண்டுள்ளது.
- மனிதன் செவ்வனே வாழ வழிகாட்டும் நூலாகும்.
- முதல் குறள் 'அகர' என 'அ' எழுத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- இறுதிக் குறளில் "பெறின்" என முடியும் எழுத்து "ன்" ஆகும்.
- ஒவ்வொருவரும் கற்கவேண்டிய நூல் திருக்குறளாகும்.
- கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு எனச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இல்வாழ்க்கை பற்றி அழகாகச் சொல்கிறது.
- கல்வியின் சிறப்பை விரித்துக் காட்டுகிறது.
- தந்தை, தனயன் கடமைகளை எடுத்துரைக்கிறது.
- அரசாட்சி முறைகளை நன்கு விளக்குகிறது.
- திருக்குறளைப் படித்தவர்கள் கற்றவர்களாகிறார்கள்.

## 26. நான் விரும்பும் பெரியார்



- நான் விரும்பும் பெரியார் கை முறுக்கிவிட்ட குத்து மீசையுள்ளவர்
- அவரது நடையிலும் பேச்சிலும் வீரம் துள்ளும்.
- அவர் பாடல்களில் புரட்சிக் கருத்துக்கள் துள்ளும்.
- பாட்டுக்கொரு புலவன் பாரதிதான் நான் விரும்பும் பெரியார்.
- சோம்பேறிகளையும் அவரது பாட்டுக்கள் சுறுசுறுப்பாக்கும்.
- பாரதியார் பாட்டுத்திறத்தாலே இந்தப் பாரினை வெல்ல வந்தவர்.
- இந்திய சுதந்திர தாகத்தை ஊட்டிய தீரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- “செந்தமிழ் நாடென்னும் போதினிலே“ தேன் பாய்வதாகப் பாடிய பெரும்புலவர்.
- “ஓடி விளையாடு பாப்பா“ என்று விளையாட்டை முதன்மைப் படுத்தியவர்.
- “சோம்பல் மிகக் கெடுதி“ என்று சொன்னவர்.
- “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது ஒன்றும் காணோம்“ என்று கூறியவர்
- நிலை கெட்ட மாந்தரைப் பார்த்து “நெஞ்சு பொறுக்குதில்லையே“ எனப் பாடியவர்.
- பண்டிதருக்கே உரித்தான தமிழைப் பாமர மக்களின் சொந்தமாக்கியவர்.
- “பாப்பாரை ஐயரென்ற காலமும் போச்சே“ என்று சமரசம் பேசியவர்.
- வாழும்போதே வாழ்த்தாத சமூகத்தில் வாழ்ந்துபோன கவிஞன்.
- பாரதி என்ற உலக மகாகவிதான் நான் விரும்பும் பெரியார்.

## 27. நான் விரும்பும் தொழில்

- ஒவ்வொருவரும் ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும்.
- தொழில் மூலம் வருவாய் வருகிறது.
- வருவாய் வயிற்றுக்குச் சோற்றைக் கொடுக்கிறது.
- வயிற்றுக்குச் சோறு கிடைத்தால் வாழ்க்கை இனிக்கிறது.
- வாழ்க்கை இனித்தால் பிறருக்கு உதவ மனம்வருகிறது.
- பிறருக்கு உதவக்கூடிய தொழிலைச் செய்வது சிறந்தது.
- தொழில்கள் யாவுமே சிறந்தவைதான்.
- ஆசிரியர் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவர்.
- மருத்துவர் நோய்களில் இருந்து உயிர்களைக் காப்பவர்.
- இவ்வாறான தொழில்களைச் “சேவை“ என அழைப்பார்கள்.
- நான் விரும்பும் தொழில் ஆசிரிய சேவைதான்.
- ஆசிரியர் மாணவர்களின் அகவிழியைத் திறப்பவர்.
- தன்னையுணரும் சமுதாயத்தை ஆசிரியர் உருவாக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிந்தனையைத் தூண்டுபவர் ஆசிரியர்.
- நற்பழக்கவழக்கங்களைச் சொல்லித் தருபவர்.
- வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி காட்டுபவர்.
- மாதா பிதா குரு தெய்வம் எனப்போற்றப்படுபவர்.
- குரு இல்லா வித்தை பாழ் என்பார்கள்.
- பாடம் சொல்லித் தருபவர் பகவானுக்குச் சமனாவார்.
- எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.
- அறிவைப் புகட்டி அன்பைப் பெருக்கும் ஆசிரியசேவையே நான் விரும்பும் தொழில்.

## 28. நான் விரும்பும் பண்டிகை





- சித்திரை மாதம் கட்டியம் கூறிவரும்.
- குயில்கள் மரங்களில் கூவி மகிழும்.
- மரங்கள் இலையுதிர்த்துத் தளிர்விடும்.
- பூக்கள் விரிந்து வண்டுகள் சுற்றும்.
- சித்திரை வந்தால் சிறுவர்களுக்குக் கொண்டாட்டந்தான்.
- சித்திரைப் புத்தாண்டு அப்போதுதான் எட்டிப்பார்க்கும்.
- தொடர்ந்து நீண்ட விடுமுறையும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புத்தகப் பைகள் ஓய்வெடுக்கும்.
- பள்ளிக்கூடங்கள் படுத்துறங்கும்.
- புத்தாடைகளும் தீன் பண்டங்களும் கிடைக்கும்.
- சித்திரைப் புத்தாண்டில் சொந்தங்கள் ஒன்றுகூடும்.
- எல்லா வீடுகளும் கலகலக்கும்.
- உறவினர்களின் வீடுகளுக்குப் போய்வரலாம்.
- விருந்துண்டு ஊஞ்சல் கட்டி ஆடி மகிழலாம்.
- நிலவினில் ஆடிப்பாடி விளையாடி மகிழலாம்.
- சிற்றில் கட்டி சிறுசோறாக்கி உண்டு களிக்கலாம்.
- ஊரெல்லாம் சுற்றி நிலாச்சோறுண்டு சந்தோசிக்கலாம்.
- நமது நாட்டில் சித்திரைப் புத்தாண்டு ஒற்றுமையை வளர்க்கும்.
- தமிழ் சிங்களப் புத்தாண்டு ஈரினங்களும் கொண்டாடும் பண்டிகையாகும்.
- ஆதலால் சித்திரைப்புத்தாண்டுதான் நான் விரும்பும் பண்டிகையாகும்.

## 29. சூரியன் இல்லாவிட்டால்




- நமக்குச் சக்தியைத் தருவது சூரியன்.
- காலையில் உதித்து வெயில் தந்து மாலையில் மறையும்.
- சூரியன் கிழக்குத் திசையில் உதிக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அது மாலையில் மேற்குத் திசையில் மறைகிறது.
- சூரியன் மறைந்ததும் இருள் சூழ்ந்து கொள்ளும்..
- பகலெல்லாம் உழைத்த உயிரினம் இரவினில் ஓய்வெடுக்கும்.
- சூரியன் இரவினில் ஓய்வெடுப்பதாகக் கதைகள் உண்டு.
- சூரியன் மிகப்பெரிய கோளமாகும்.
- சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்களுண்டு.
- அவை நீள்வட்டப் பதையில் சூரியனை வலம் வருகின்றன.
- சூரியன் இல்லாவிடில் நமது உலகம் இருண்டுவிடும்.
- உயிரினங்கள் வாழமுடியாது போய்விடும்.
- வெப்பம் கிடைத்தால்தான் சக்திபிறக்கும்.
- சூரியசக்தியினால் கோள்கள் இயங்குகின்றன.
- சூரியவெப்பத்தில் நீர்நிலைகள் ஆவியாக்கம் பெறுகின்றன.
- நீராவி மேலெழுந்து ஒடுங்கி மழையாகப் பெய்கிறது.
- மழையின்றேல் உலகில் விளைச்சல் இல்லை.
- விளைச்சல் இன்றேல் உயிரினங்களுக்கு உணவில்லை.
- சூரியனால் நீரியல் வட்டம் நடைபெறுகிறது.
- சூரிய வெப்பத்தினால் வளி சூடாகிறது.
- வெப்பம் அடைந்த வளி மேலெழுந்து அசைகிறது.
- ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குக் காற்றாக வீசுகிறது.
- கடலலையை அசைத்து இரைந்து வீசச் செய்கிறது.
- சூரியன் உலகினை வாழ்விக்கும் கோளாகும்.
- சூரியன் இல்லாவிட்டால் பூமி சூனியமாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. சந்திரன்




- சந்திரன் இரவில் வானவீதியில் பவனி வரும்.
- நட்சத்திரக் கூட்டங்களின் நடுவில் ஒளிவீசும்.
- சந்திரனுக்குத் தனியே ஒளியில்லை.
- சூரியனின் ஒளியிலேயே மின்னுகிறது.
- சந்திரன் நமது பூமியின் உபகோளாகும்.
- சந்திரன் தன்னைத்தானே சுற்றுகிறது.
- சந்திரன் பூமியைச் சுற்றிவரும் காலம் ஒரு மாதமாகும்.
- சந்திரனை நிலா, அம்புலிமாமா, திங்கள் என்றும் அழைப்போம்.
- சந்திரன் கூனற்பிறையாகத் தெரியும்.
- பின் ஒவ்வொரு நாளும் வளரும்.
- ஒருநாள் முழுநிலவாகக் காட்சிதரும்.
- அதனை முழுநிலா அல்லது பூரணை என்பார்கள்.
- அதன்பின் தேய்ந்து சென்று ஒருநாள் முழுமையாக மறையும்.
- அதனை அமவாசை என்பார்கள்.
- சந்திரனின் ஈர்ப்புவிசையால் பூமியில் வற்றுப் பெருக்கு உருவாகிறது.
- சந்திரனுக்கு விண்கலம் அனுப்பி ஆராய்கிறார்கள்.
- அமெரிக்கரின் விண்கலம் சந்திரத்தரையில் இறங்கியது.
- ஆம்ஸ்ரோங், அல்ரின் தரையில் இறங்கிப் படம்பிடித்தார்கள்.
- சந்திரக் கற்களையும் எடுத்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சந்திரனில் வளிமண்டலம் இல்லை.
- அவர்களின் காலடித்தடம் சந்திரத் தரையில் படிந்துள்ளது.
- பகலில் தாங்க முடியாத வெப்பமும் இரவில் அதிக குளிரும் நிலவுகிறது.
- சந்திரனைக் கடவுளாக வணங்கும் வழக்கம் இருந்ததாம்.

## 31. நான் பார்த்த கிரகணம்





- அன்று காலை பத்து மணியிருக்கும்.
- சூரிய கிரகணம் தோன்றும் என்றார்கள்.
- சொன்னபடியே மெதுவாகச் சூரியன் மறைந்தது.
- நான் வாழ்க்கையில் காணாத அதிசயம் அது.
- பறவைகள் கூடுகளில் விரைந்து ஒதுங்கின.
- வீதிகளில் வாகனங்கள் வெள்ச்சங்களைப் போட்டு நின்றன.
- வானத்தில் நட்சத்திரக் கூட்டங்கள் பளீச்சிட்டன.
- பகலிலும் நட்சத்திரங்கள் தெரியும் என்று இராமகிருஸ்ணர் கூறினார்.
- கேது என்ற பாம்பு சூரியனை விழுங்குவதால் கிரகணம் ஏற்படுமாம்.
- கிரகணத்தின் போது சூரியனை வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடாது.
- புகையூட்டிய கண்ணாடி ஊடாகப் பார்க்கலாம்.
- அதிகாலையில் உதிக்கும் சிவந்த சூரியனைப் போல் தெரியும்
- சூரியனும், சந்திரனும் பூமியும் நேர்கோட்டில் வரும்போது கிரகணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகிறது.

- சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சந்திரன் வரும்போது சூரியகிரகணம் தோன்றுகிறது.
- சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் பூமி வரும்போது சந்திரகிரகணம் தோன்றுகிறது.
- நான் பாரத்தது சூரிய கிரகணமாகும்.
- கிரகணங்கள் பற்றிய மூடக் கொள்கைகள் பலவுண்டு.
- கிரகணத்தின் போது சாப்பிடக்கூடாது என்பார்கள்.
- கிரகணம் முடிந்தபின் குளித்துவிட்டுத்தான் சாப்பிடலாம் என்பார்கள்.
- தாய்மார்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாம்.

## 32. காலைக் காட்சி



- விடிகாலையில் கோழிகள் கூவின.
- தொடர்ந்து பறவைகள் இசையெழுப்பின.
- கோயில்களின் மணிகள் ஒலித்தன.
- கூடவே திருப்பாசுரங்கள் காற்றில் கலந்து பரவின.
- தேவனின் மகிமை மனங்களில் நிறைந்து கொண்டது.
- தாய்ப்பசுக்கள் கன்றுகளைத் தேடி அழைத்தன.
- இருள் மெல்லக் கலையத் தொடங்கியது.
- இரவு முழுவதும் வெள்ளிப்பூக்கள் வானில் இருந்தன.
- அவை மெதுமெதுவாக மறையத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிழக்கில் வண்ணக் கோலங்கள் நெளிந்தன.
- இருளைக் கிழித்துச் சூரியக்கதிர்கள் புறப்பட்டன.
- கூடுகளில் இருந்து பறவைகள் இரைதேடப் புறப்பட்டன.
- மக்கள் தங்கள் கடமைகளில் மூழ்கத்தொடங்கினர்.
- பாய்கள் சுருண்டு மூலையில் ஒதுங்கிக் கொண்டன.
- முற்றம் கோலத்தால் அழகு பூண்டது.
- பூந்தோட்டம் நிறைந்து பூக்கள் சிரித்தன.
- அவை மாலைகளாகத் தொடுக்கப்பட்டன.
- கிணற்றடியில் தண்ணீரின் சலசலப்பு கேட்டது.
- உடல் நனைந்து சுகம் கண்டது.
- காலைக் காட்சி மனங்களைக் கொள்ளை கொள்ளும்.

## 33. மாலைக் காட்சி



- சூரியன் மேற்கே மறையும் நேரமே மாலையாகும்.
- அப்போது மேற்குவானம் மிகவும் அழகாயிருக்கும்.
- தொடுவானில் சூரியன் அழகாகத் தெரியும்.
- அங்கே மேகக்கூட்டம் வர்ணம் பூசும்.
- அற்புதக் காட்சிகள் விரியும்.
- பலவிதமான காட்சிக் கோலங்களைக் காணலாம்.
- நம் மனதில் கற்பனையைத் தோற்றுவிக்கும்.
- பலவகையான தங்க ஓடங்கள் மிதக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திமிங்கிலங்கள், விமானங்கள், தீவுகள் தெரியும்.
- சிறுவர்கள் சுவரில் அள்ளி வீசிய வண்ணங்களாகக் காட்சி தரும்.
- நிமிடத்துக்கு ஒருமுறை காட்சிகள் மாறும்.
- மனதில் சந்தோசம் குடிகொள்ளும்.
- இருள் மெல்ல மெல்லப் படரும்.
- அதற்கேற்ப வண்ணங்களும் நிறங்கொள்ளும்.
- வானவீதியில் நட்சத்திரப் பூக்கள் எட்டிப் பார்க்கும்.
- சூரியனை வழியனுப்ப மேகக் கூட்டங்கள் மேற்கு வானில் தோன்றும்.
- மாலைக்காட்சி மனதைச் சந்தோசப்படுத்தும்.
- பகலில் உழைத்த உயிரினங்கள் ஓய்வுகொள்ள மாலை மலர்கிறது.
- வளர்ப்பு விலங்குகள் தம் வீடுகளுக்கு விரையும்.
- பறவைகள் தம்கூடுகளுக்குச் செல்லும்.
- மாலை முழுவதும் விளையாடிய சிறுவர்கள் படிக்கத்தொடங்குவார்கள்.
- கோயில்களில் மாலைநேரப் பூசை நடக்கும்.
- மாலையில் ஒலிக்கும் கோயில் மணியோசை மனதைக் கவரும்.

## 34. மழை நாள்



- சடுதியாக வானம் இருண்டு கறுத்தது.
- கருமேகங்கள் சுழன்று வானை மூடி மறைத்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மின்னல் வெட்டிச் சுழன்று அடித்தது.
- இடியிடித்து காது அதிரும்படி முழங்கியது.
- கடும் வரட்சியின்பின் பெரு மழை பெய்தது.
- வரண்ட நிலம் மழைநீரை உறிஞ்சிக் குடித்தது.
- வாடிய பயிர்கள் சிலிர்த்து நிமிர்ந்தன.
- பசுக்கள் தலைகளைக் கவிழ்த்துச் சுருண்டன.
- எருமைகள் ஆனந்தமாக மழையில் நனைந்து மகிழ்ந்தன.
- சிறு திவலைகள் துளிகளாகிப் பெருமழையாகப் பெய்தது.
- சிறுதுளிகள் ஒன்று சேர்ந்து அருவியாக நிலத்தில் ஊர்ந்தது.
- அருவிகள் ஒன்றுசேர்ந்து ஆற்று வெள்ளமாக ஓடியது.
- மழைநீர் பள்ளம் பார்த்துப் பாய்ந்து நிறைந்தது.
- கூரையில் வழிந்த மழைநீர் வடிந்து வீட்டைச்சுற்றி ஓடியது.
- சிறுவர்கள் கடதாசியில் கப்பல் செய்து மிதக்கவிட்டனர்.
- கோழிகள் நனைந்து ஒதுக்கிடம் தேடி ஒதுங்கின.
- ஆடுகள் ஓடி பட்டியினுள் நனையாது நின்றன.
- பாடசாலையினுள் மழைத்தாரை சுழன்றடித்தது.
- சிறுவர்கள் மழைத்தாரையை ரசித்தனர்.
- எங்கும் கடல்போல் வெள்ளம் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. எனது ஆசிரியர்




- நான் நான்காம் வகுப்புப் படிக்கிறேன்.
- எனது வகுப்பாசிரியர்தான் திருவாளர் ஆனந்தமுரளி.
- அவர் மிகவும் அன்பானவர்.
- பிள்ளைகளோடு இனிமையாகப் பேசுவார்.
- இன்முகத்தோடு கலந்துரையாடுவதில் வல்லவர்.
- விளையாட்டுக்கள் ஊடாகச் செயற்பாடுகளைச் செய்விப்பார்.
- பிள்ளைகளின் கண்மட்டத்துக்குக் குனிந்து உரையாடுவார்.
- பிள்ளைகள் பாடசாலைக்குத் தவறாது வருவதைக் கவனிப்பார்.
- இடருறும் பிள்ளைகளுக்குத் தனியாக இருந்து உதவுவார்.
- எங்கள் வகுப்புக் கலகலப்பாகவே இருக்கும்.
- ஆடலும் பாடலும் அபிநயமும் பாடமாக இருக்கும்.
- அலுப்பே எங்களுக்கு இருக்காது.
- எனது ஆசிரியர் இரக்க சுபாவமுடையவர்.
- கடினமான கணிதபாடத்தைக் கற்கண்டாகக் கற்பிப்பார்.
- சூழல் பாடமென்றால் நாங்கள் பல உருவங்களாக மாறுவோம்.
- அரங்கத்தில் நாடக மாந்தராகி நடிப்போம்.
- எனது ஆசிரியரின் கற்பித்தல் விநோதமானது.
- ஒரு பாடத்தின் பின் ஒரு விளையாட்டு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கதைகளைக் கூறும்போது பாத்திரமாக மாறிக் கூறுவார்.
- குரலில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்.
- அவரிடம் கற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

## 36. எனது அதிபர்



- ஒரு பாடசாலையின் தலைவரை அதிபர் என்போம்.
- எங்கள் அதிபர் அருமையான மனிதர்.
- அன்பும் அறிவும் அடக்கமும் மிக்கவர்.
- பிறரை மதிக்கும் பண்புள்ளவர்.
- மாணவர்களையும் பெற்றாரையும் பெரிதாக மதிப்பவர்.
- பிள்ளைகளது கல்வியில் ஆர்வம் காட்டுபவர்.
- பாடசாலையின் உயர்வுக்காக என்றும் உழைப்பவர்.
- ஆசிரியர்களை மதித்து அவர்களுக்கு உதவுபவர்.
- ஆசிரியர்களின் கற்பித்தல் தேவைகளை அறிந்து உதவுபவர்.
- பாடங்களோடு இணைப்பாட விதானங்களிலும் கவனம் செலுத்துபவர்.
- எங்கள் பாடசாலை தேசியரீதியில் முன்னணி வகிக்கவேண்டும் என்று உழைப்பவர்.
- ஏழை மாணவர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு உதவுபவர்.
- கையில் பிரம்பு இல்லாது வகுப்புக்களில் உலா வருவார்.
- ஆசிரியர்கள் இல்லாத வகுப்புக்களில் பாடங்களை நடத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எங்கள் அதிபர் எந்தப் பாடத்தையும் மிக இலகுவாகக் கற்பிப்பார்.
- அவரை அதிபராக அடைவதற்கு நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்.
- எனது அதிபர் நீடு வாழ இறைவன் அருள்பாலிப்பாராக.

## 37. எனது பாடசாலை



- நான் படிக்கும் பாடசாலை எனது பாடசாலையாகும்.
- எனது பாடசாலை நல்ல சூழலில் அமைந்துள்ளது.
- நல்ல சூழல் கற்றலுக்கு உதவியாக இருக்கும்.
- கற்றல் உபகரணங்களை சூழலில் இருந்தே பெற்றுக் கொள்வோம்.
- எனது பாடசாலையில் ஆயிரம் மாணவர்கள் கற்கிறார்கள்.
- எனது பாடசாலை இருநூறு வருடங்களாக இயங்கிவருகிறது.
- எனது தாத்தாவும் அப்பாவும் இங்குதான் கற்றார்கள்.
- பல அறிஞர்களும் அரசியல்வாதிகளும் எனது பாடசாலையின் பழைய மாணவர்களாவர்.
- பல கட்டிட விற்பன்னர்களையும், மருத்துவர்களையும் எனது பாடசாலை உருவாக்கியுள்ளது.
- சிறந்த விளையாட்டு வீரர்களையும் உருவாக்கியுள்ளது.
- சிறப்பாக பல நல்ல நாட்டுப் பற்றாளர்களை உருவாக்கியுள்ளது.
- பல எழுத்தாளர்களும், கவிஞர்களும் உருவாகக் காரணமாயிருந்தது.
- எனது பாடசாலையில் அரியதொரு நூலகம் உள்ளது.
- ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு சிறந்த நூலகம் அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எனது ஆசிரியர்களும் பெற்றார்களும் நூலக வளர்ச்சிக்கு உதவுகிறார்கள்.
- மாணவர்களாகிய நாங்களும் நூலக வளர்ச்சிக்கு உதவுகிறோம்.
- நல்ல கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.
- வாழ்க்கைக்கு வழிகாட்டுவது நல்லதொரு பாடசாலைதான்.
- எனது பாடசாலையை நான் நேசிக்கிறேன்.

## 38. மரம் நடுவோம்



- உலகில் வாழும் உயிர்களை இருவகைப் படுத்துவார்கள்.
- தாவரங்கள் என்றும் விலங்குகள் என்றும் வகைப்படுத்துவர்.
- விலங்குகள் அசைந்து திரிவன.
- தாவரங்கள் ஒரே இடத்தில் நின்று வாழ்வன.
- தாவரங்களை மரம், செடி கொடி, புல், பூண்டு என வகைப்படுத்தலாம்
- மரம், செடி ஒரே இடத்தில் நின்று வாழ்வன.
- கொடிவகைகள் கொழு கொம்புகளில் பற்றிப்படர்ந்து வாழ்வன.
- மரஞ்செடி கொடிகள் ஒட்சிசினை (பிராணவாயுவை) தயாரிக்கின்றன.
- பகலில் ஒட்சிசினை வெளிவிடுகின்றன.
- இரவில் கரியமில வாயுவை (காபனீரொட்சைட்டு) வெளிவிடுகின்றன.
- மரங்களும் ஏனைய உயிரினங்களைப் போல் சுவாசிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உணவினைத் தயாரித்து உட்கொள்கின்றன.
- நிலத்தில் உள்ள கனிய நீரை வேர்கள் மூலம் உறிஞ்சுகின்றன.
- சூரிய ஒளியைப் பெற்று உணவினைத் தயாரிக்கின்றன.
- அதனை ஒளித்தொகுப்பு என்பார்கள்.
- ஒளித்தொகுப்பின்போது மனித வாழ்வுக்கு முக்கியமான பிராண வாயு வெளியிடப்படுகிறது.
- நாம் பிராண வாயுவினைச் சுவசிக்கின்றோம்.
- மரங்கள் இல்லாவிடில் பிராணவாயு இல்லை.
- உயிரினம் வாழ மரங்களை நடுவோம்.
- வீட்டுக்கொரு மரம் வளர்த்தால் நாடு நலம்பெறும்

## 39. சுத்தம் சுகம் தரும்




- தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பார்கள்.
- நாம் சுத்தமாக இருக்கப் பழகவேண்டும்.
- கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்றார்கள்.
- அதாவது உடை கிழிந்திருந்தாலும் அதனைக் கழுவியுடு என்பது பொருளாகும்
- நமது முன்னோர்கள் சொல்லி வைத்த அத்தனையும் முத்துக்கள்.
- நாம் வாழும் சூழல் சுத்தமாக இருக்க வேண்டும்.
- சூழலை வாராந்தம் சுத்தப் படுத்தி வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நமது வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
- பலர் தங்களது வீட்டைச் சுத்தம் செய்வதில்லை.
- நாம் திறந்த பொருளாதார நாட்டில் வாழுகிறோம்.
- உற்பத்தியைப் பெருக்க முனைகிறோம்.
- உற்பத்தி பெருக்கத்தினால் சூழல் மாசடைகிறது.
- நிலம், நீர், வளி ஆகியவற்றூடாக சூழல் மாசடைகிறது.
- சூழல் மாசடைந்தால் தொற்றுநோய் தாக்கும்.
- தொற்றுநோய்கள் வராதிருக்க சுத்தமாக இருப்பது நல்லது.
- சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம்.
- சிரமதானம் செய்வதன் மூலம் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கலாம்.
- வீட்டைச் சுத்தமாக வைத்திருப்போம்.
- வீடு சுத்தம் கண்டால் நாடு சுத்தமாகும்.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றார்கள்.
- சுத்தமாக இருந்து சுகத்தைப் பேணுவோம்.

## 40. சிறுவர் தினம்




- பதினெட்டு வயது வரையுள்ள ஆண், பெண் இருசாராரையும் சிறுவர் எனக் கூறுவார்கள்.
- சிறுவர்களைப் பெரியவர்கள்போல் பாவித்துத் துன்புறுத்தினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர்களைக் கொண்டு கடும் வேலைகளைச் செய்வித்தார்கள்.
- சிறுவர்கள் துஸ்பிரயோகத்துக்கு உள்ளானார்கள்.
- சிறுவர்களின் துயரங்களைப் போக்க நல்ல மனமுடையவர்கள் எண்ணினார்கள்.
- ஐக்கியநாடுகள் சிறுவர் உரிமைப் பட்டயத்தைத் தயாரித்தன.
- கல்விகற்கும் உரிமை பிரகடனமானது.
- சிறுவர்களின் தேவைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது.
- சிறுவர்களைத் தண்டித்தல், துன்புறுத்தல் ஆகாது.
- இவற்றை வலியுறுத்தும் வகையில் சிறுவர் தினம்கொண்டாடப்படுகிறது.
- ஒக்டோபர் முதலாம்நாள் சிறுவர் தினமாகும்.
- சர்வதேச நாடுகள் சிறுவர் தினத்தை விமரிசையாகக் கொண்டாடுகின்றன.
- சிறுவர்களின் உரிமைகளை உலகினுக்கு எடுத்துக் காட்டவே சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.
- சிறுவர்களின் பாதுகாப்பு அரசினது பொறுப்பாகும்
- அவர்களது நல்வாழ்வு பெற்றார். அரசினதும் கடமை என வலியுறுத்தப் படுகிறது.
- சிறுவர் தினத்தைக் கொண்டாடினால் மட்டும் போதாது.
- அதன்படி சிறுவர்களின் நலனில் அனைவரும் கரிசனை காட்டவேண்டும்.
- நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் சிறுவர்கள்தான் என்பதைச் சிறுவர்தினம் பறைசாற்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. முதியோரைப் பேணுவோம்




- முதியோர்கள் நமது நாட்டின் முதுகெலும்புகள்.
- நமக்காக நாளெல்லாம் உழைத்த உத்தமர்கள்.
- நமது முதியோர்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் உழைத்தவர்கள்.
- இன்றைய இளைஞர்கள்தான் நாளைய முதியவர்கள்.
- இளைஞர்களது உழைப்பு ஈடிணையற்றது.
- அவர்கள் முதுமையடைந்ததும் மூலையில் ஒதுக்குவதா?
- இன்று நாட்டின் பலபகுதிகளில் முதியோர் இல்லங்கள் முளைத்து வருகின்றன.
- இது எதனைக் காட்டுகிறது?
- முதியோர்கள் சமூகத்தின் முட்டுக்கட்டைகள் என்பதையா காட்டுகிறது.
- கணவனும் மனைவியும் உழைக்கச் செல்வதால் இந்தநிலை ஏற்படுகிறது.
- முதியவர்கள் நமக்காகப் பாடுபட்டதைப் போற்றவேண்டும்.
- நமக்காக எத்தனை ஆயிரம் தியாகங்களைச் செய்திருப்பார்கள்.
- முதியோர்கள் இளமைக்காலத்தில் நட்ட மரங்களில் இருந்து பயன்களைப் பெறுகிறோம்.
- அவர்கள் கட்டித்தந்த வீடுகளில் வாழுகிறோம்.
- அவர்கள் எழுதிவைத்த நல்லனவற்றைக் கற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இளமையில் அவர்கள் இட்ட திட்டங்களால் நாம் உயர்வடைகிறோம்.
- அவர்கள் முதுமையடைந்தபின் பாதுகாப்பது நமது கடமையாகும்.
- 'முதியோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பார்கள்.
- அவர்களது சொற்கேட்டு நடக்கவேண்டும்.
- முதியோர்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது நமது தலையாய கடமை.

## 42. மின்சாரத்தின் பயன்




- வானில் மின்னல் தோன்றுவதைப் பார்க்கிறோம்.
- மேகத்திரள் ஒன்றோடு ஒன்று உரசும்போது மின்னல் தோன்றுகிறது.
- மேகத்திலுள்ள நேர் மின்னோடு எதிர் மின்னின் தாக்கத்தினால் மின்னல் ஏற்படுகிறது.
- வானில் தோன்றிய மின்னலில் உள்ள மின்சாரத்தை பூமியில் கண்டறிந்தார்கள்.
- மின்சாரம் சிறந்த ஏவலாளி ஆனால் பயங்கர எஜமான்.
- கண்ணுக்குத் தெரியாத மின்சாரத்தைக் கண்டறிந்த பெருமை மனிதனுக்கு உண்டு.
- இன்று சிறந்த ஏவலாளியாக மின்சாரம் முன்னணி வகிக்கிறது.
- ஒரு இடத்தில் இருந்து இன்னோரிடத்துக்குக் கடத்தியூடாக கொண்டு செல்லப்படுகிறது.
- வெப்பத்தின் சாரம்தான் மின்சாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மின்சாரம் இல்லாது மனித வாழ்க்கையே இல்லை என்றநிலை தோன்றிவிட்டது.
- மின்சாரம் வீட்டுவேலைகளைச் செய்ய உதவுகிறது..
- வீட்டை ஒளிமயமாக்கி வேண்டியபோது காற்றையும் வீசவிடுகிறது.
- உடுதுணிகளைக் கழுவி, உலரவைத்து மினுக்கித் தருகிறது.
- சமைக்கவும், சமைத்த உணவைப் பாதுகாக்கவும் உதவுகிறது.
- நீரிறைத்து, அறுவடைசெய்து, சூடடித்து நெல்மணியாக்கித் தருகிறது.
- கணினி ஒலி ஒளிச் சாதனங்களை இயக்குகிறது.

## 43. கடற்கரையில் நான்




- கடற்கரையில் நான் நிற்கிறேன்.
- கடலலைகள் எனது காலைத் தழுவி ஓடுகின்றன.
- கடலலைகள் ஒன்றன்பின் ஒன்றாக சுருண்டு எழுகின்றன.
- வளைந்து நெளிந்து கரையில் மோதுகின்றன.
- கடற்கரை மணல் "ஸ்ஸ்ஸ்" என்று உறிஞ்சுகிறது.
- கரையில் நுரைபடர்ந்து ஒதுங்கி அடையலாகின்றது.
- சிறுநண்டுகள் படம் வரைந்து விளையாடுகின்றன.
- அலை பொங்கி வேகமாக வருகின்றது.
- சிறுநண்டுகள் ஓடி ஒளிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அலைவந்து படங்களை அழித்தோடிப் போகின்றது.
- சிறுவர்கள் ஈரமணலில் வீடுகளைக் கட்டுகின்றனர்.
- கடல் இரைந்து கொண்டே அலைகளைத் தள்ளுகிறது.
- தள்ளுண்ட அலைகள் தரையில் மோதி இரைகின்றன.
- காற்று சில்லென்று வீசுகிறது.
- நண்பர்களோடு கடற்கரை மணலில் விளையாடுவது கொள்ளை இன்பம்.
- தூரத்தே படகுகள் அசைந்து செல்கின்றன.
- சுனாமியின் கொடுமை மனதில் தெரிகிறது.
- உயிர்களையும். உடைமைகளையும் வாரிச்சுருட்டி விழுங்கியது.
- வாரி விழுங்கியதால் கடலுக்கு வாரி என்ற பெயர் வந்ததாம்.
- அலைகள் ஆரவாரித்துப் பெரிதாய் எழுந்தால் பயம் வந்துவிடுகிறது.
- நிலா மெல்லென கடலினுள் இருந்து எழுகிறது.
- அதன் விம்பம் கடற்பரப்பில் பிரவாகிக்கிறது.
- கடற்கரையில் கொள்ளை இன்பம் கொட்டிக்கிடக்கிறது.

## 44. எனக்கு வால் முளைத்தால்..



- பொதுவாக விலங்குகளுக்கு வாலுண்டு.
- குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பார்கள்.
- எனக்கு வால் முளைத்தால் சந்தோசப் படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏனென்றால் மனிதருக்கு இல்லாத வால் எனக்குண்டல்லவா?
- வகுப்பில் தூங்கும் நண்பரின் காதுகளில் வாலைவிட்டுத் திருகுவேன்.
- நண்பர்களது மூக்கில் வாலைச்செருகித் தும்முவிப்பேன்.
- உயரமான மரங்களில் உள்ள பழங்களை ஒரேதாவில் பாய்ந்து பிடுங்குவேன்.
- வாலினாலும் மரக்கிளைகளைப் பிடித்துத் தொங்குவேன்.
- கட்புலனற்றோரை வாலைப் பிடித்து வரும்படி ஆற்றுப்படுத்துவேன்.
- எனது வாலைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பேன்.
- விரைவாக ஓடுவதற்கு வால் பயனுள்ளதாம்.
- ஓட்டப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைக் குவிப்பேன்.
- தலையணை எனக்குத் தேவையில்லை.
- எனது வாலைச்சுருட்டித் தலையணையாகப் பயன்படுத்துவேன்.
- சண்டையிடும் நண்பர்களை வாலினால் கட்டிப் போடுவேன்.
- நண்பர்களை வாலினால் கட்டியணைத்து விளையாடுவேன்.
- அழகான உறையொன்று செய்து வாலை அழகு படுத்துவேன்.
- வாலைச் சுருட்டி நிமிர்த்தி வித்தைகள் காட்டுவேன்.

## 45. எங்கள் கோயில் திருவிழா




- கோயில் ஒரு ஊரின் பெருமையைக் காட்டும்.
- கோயில் ஒரு ஊரின் சிறப்புக்கு அணிகலனாக விளங்குவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொதுவாகக் கோயில் இல்லா ஊர்கள் இல்லை.
- கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி.
- கோயில் திருவிழா ஊர்மக்களுக்குச் சந்தோசம் தருவது.
- எங்கள் கோயில் திருவிழா இருபத்தைந்து நாட்களுக்கு நடைபெறும்.
- கோயிலில் கொடியேறினால் ஊர் பக்தியில் மூழ்கிவிடும்.
- திருவிழாக்காலங்களில் கோயில்களிலே விஷேட பூசைகள் நடக்கும்.
- கொடியேற்றத்தோடு தொடங்கும் திருவிழா தீர்த்தமாடலுடன் முடிவுறும்.
- அலங்கரிக்கப்பட்ட தேரில் சுவாமி வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.
- பக்தர்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவார்கள்.
- இரவு நேரங்களில் கோயில் பளிச்சென்று இருக்கும்.
- காவடி, கரகாட்டம் எனக் களியாட்டங்களும் நடைபெறும்.
- திருவிழாக் காலங்களில் அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்வார்கள்.
- திருவிழாக் காலங்களில் ஊர்மக்கள் மரக்கறி உணவுதான் உண்பார்கள்.
- அனைவரும் பயபக்தியாகவும் அமைதியாகவும் வாழ்வார்கள்.

## 46. எனது பொழுது போக்கு



- ஓய்வு நேரங்களைப் பயனுள்ளவகையில் செலவிடுவதைப் பொழுதுபோக்கு என்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நான் எனது ஓய்வான நேரங்களைப் பயனுள்ள வழியில் கழிக்கிறேன்.
- எனது வீட்டுத்தோட்டத்தில் ஓய்வான நேரத்தைக் கழிப்பேன்.
- நிலத்தைக் கொத்திப் பண்படுத்தியுள்ளேன்.
- நாற்று மேடைகள் அமைத்து விதைகளைத் தூவியுள்ளேன்.
- அவை நாற்று மேடைகளில் வளர்ந்துள்ளன.
- பாத்திகள் அமைத்து அவற்றை நட்டுள்ளேன்.
- காலையும் மாலையும் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றுவேன்.
- கத்தரி, வெண்டி, மிளகாய், காய்கறிவகைகள் நிறையவே உள்ளன.
- புடலங்காய்கள் பந்தலில் தொங்குவது அழகுதான்.
- தக்காளி காயும் பழமுமாய் விரிந்து கிடக்கிறது.
- மிகச்சத்துள்ள கீரைவகை எனது தோட்டத்தில் உள்ளன.
- இயற்கைப் பசளையைத்தான் இட்டு வருகிறேன்.
- குழியை வெட்டி. அதனுள் இலைகுழைகளையும் சாணத்தையும் இடுவேன்.
- அடிக்கடி கிளறிவிட்டால் வேண்டிய பசளையைப் பெறலாம்.
- எனது பொழுது போக்கு வருமானத்தைத் தருகிறது.
- எனது தோட்டம் கீரைவகை போன்ற சத்துள்ள உணவையும் தருகிறது.
- புத்தகங்களை வாசிப்பதன்மூலம் தகவல்களை அறியலாம்.
- இரவு நேரங்களில் புத்தகங்களைப் படிப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. போக்கு வரத்துச் சாதனங்கள்



- ஆதியில் மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு நடந்தே சென்றார்கள்.
- காலகதியில் விலங்குகளில் சவாரி செய்து விரும்பிய இடங்களுக்குச் சென்றார்கள்.
- வண்டிகளைச் செய்து அதற்குச் சில்லுகளையும் பொருத்தி விலங்குகளைப் பூட்டிச் சவாரி செய்தார்கள்.
- ஆற்றைக்கடக்க நீச்சலையும் மிதவைகளையும் பயன்படுத்தினார்கள்.
- படகுகளைத் தயாரித்து அதிலே பாய்களை விரித்துக் காற்றின் உதவியுடன் பயணம்செய்தார்கள்.
- நிலத்திலும், நீரிலும் பயணத்தை மேற்கொண்ட மனிதன் ஆகாயத்திலும் பயணம் செய்கிறான்.
- பயணங்களைச் செய்ய வாகனங்களைச் செய்தான்.
- நிலத்தில் வீதிகளை அமைத்து வாகனங்களைச் செலுத்துகிறான்.
- நிலம், நீர் ஆகாயம் எனப் பலமார்க்கங்களிலும் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- மோட்டார் வண்டி, புகைவண்டி, கப்பல். ஆகாயவிமானம் எனப்பலவித போக்குவரத்துச் சாதனங்கள் உள்ளன.
- விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினால் நினைத்த இடத்துக்குச் சிலமணித்துளி நேரத்தில் பயணம் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிராமத்தவர்கள் இன்றும் மாட்டு வண்டிகளையே பயன்படுத்துகிறார்கள்.
- சைக்கிள்கள் அனைவருக்கும் எளிமையான போக்குவரத்துச் சாதனமாக உள்ளது.
- மிதிவண்டி, மாட்டுவண்டிகளுக்கு எரிபொருள் அவசியமில்லை.
- ஏனையவற்றுக்கு எரிபொருள் அத்தியாவசியமாகிறது.

## 48. நான் செய்த பிரயாணம்




- சித்திரை விடுமுறையில் பதுளைக்குச் செல்லத் திட்டமிட்டோம்.
- அப்பா கோச்சியில் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.
- திருகோணமலையில் இருந்து பொல்காவலைவரை சென்றோம்.
- பொல்காவலைச் சந்தியில் இறங்கி பதுளைசெல்லும் கோச்சியில் ஏறினோம்.
- அதுவே ஒரு துணிகரச்செயலாக இருந்தது.
- பகலில் சென்றதால் சந்தோசம் இரட்டிப்பானது.
- கண்டியிலிருந்து பதுளைப் பயணம் அற்புதமானது.
- வளைந்து வளைந்து கோச்சி பயணித்தது.
- வான்முட்டும் மரங்கள் முகில் கூட்டங்களைத் தொடும்.
- மரங்களைத் தடவிச் செல்லும் மேகக்கூட்டம் சாரிசாரியாகச் செல்லும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பனிமூட்டம் புகைவண்டி யன்னலூடாகப் புகுந்து எங்களையும் தழுவிச் சென்றது.
- அப்போது சில்லென்று குளிர்தழுவிக் கொள்ளும்.
- மலைச்சாரல்களில் காட்டுப்பூக்கள் கூத்தடிக்கும்.
- பனி மூட்டம் வழிகளை மறைத்து இருளாக்கும்.
- மழை முகிலைக்கிழித்து வெளிச்சத்தைப் பாய்ச்சி கோச்சி விசிலடித்து விரைந்து செல்லும்.
- தேயிலைத்தோட்டங்கள் மலைகளை மூடிப் பச்சைக் கம்பளங்களாகத் தெரியும்.
- சலசலத்து ஓடிவழியும் அருவிகளின் காட்சி அற்புதம்.
- தூரத்தே நகரங்கள் மிதப்பதுபோன்று காட்சிதரும்..
- பதுளைப் பிரயாணம் அலுப்பில்லததாக இருந்தது.

## 49. விஞ்ஞானத்தின் பயன்பாடு




- இன்று விஞ்ஞானம் எங்கும் வியாபித்துள்ளது.
- மனிதனின் விடாமுயற்சியின் பயனாக கிடைத்த வெற்றியே விஞ்ஞானப் பயன்பாடு.
- மனித மூளையும் சூழலின் பயன்பாடும் சேர்ந்ததால் விஞ்ஞான விந்தைகள் பிறந்தன.
- விஞ்ஞானம் மின்னுற்பத்தியைத் தந்தது.
- மின்னுற்பத்தி மனித வாழ்க்கையையே இயக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனிதன் செய்த வேலைகளை இன்று விஞ்ஞானம் செய்கிறது.
- எதிரொலியை கேட்ட மனிதன் வானொலியைக் கண்டான்.
- வானொலி இன்று நமது வாழ்வில் முக்கிய பங்கினை ஆற்றுகிறது.
- கிரகம்பெல் கம்பியூடாக அனுப்பும் தந்தியைக் கண்டறிந்தார்.
- இன்று கம்பியின்றிச் செய்திகளை அனுப்பும் "செல்போன்"களைக் கையாளுகிறார்கள்.
- சூரியனையும், நட்சத்திரங்களையும் கொண்டு மனிதன் திசையினை அறிந்தான்.
- இன்று திசையறி கருவியினைக் கொண்டு திசையினை அறிகின்றான்.
- தூரத்தில் நடப்பனவற்றை வீட்டில் இருந்தவாறே தொலைக்காட்சியில் கண்டு களிக்கிறான்.
- சமைப்பதற்கும், உடுதுணிகளைக் கழுவுவதற்கும் விஞ்ஞானம் உதவுகிறது.
- பாரந்தூக்கவும், நிலத்தைப் பண்படுத்தவும் விஞ்ஞானம் பயன்படுகிறது.
- கொம்பியூட்டர் வந்ததால் உலகம் சுருங்கிவிட்டது.
- விஞ்ஞானம் ஒளியைத் தந்து காற்றை விசுறுகிறது,

## 50. தொலைக்காட்சி



- தொலைக்காட்சி ஊடகசாதனங்களில் ஒன்றாகும்.
- தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத வீடுகளே இல்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எங்கோ நடக்கும் புதினங்களை வீட்டில் இருந்தவாறே பார்த்தறிய தொலைக்காட்சி உதவுகிறது.
- ஜோன் பெயர்டும், சி.எப்.ஜாங்கினும் இதனைக் கண்டு பிடித்தார்கள்.
- செய்திகள் கலைநிகழ்வுகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கலாம்.
- உலக நிகழ்வுகளை வீட்டிலிருந்தவாறே கண்முன்னால் கண்டுகொள்ளலாம்.
- திரைப்படங்கள், கேளிக்கைகள், நாட்டு நடப்புக்களைப் பார்த்தறியலாம்.
- தொலைக்காட்சியைப் பத்தடி தொலைவிலிருந்தே பார்க்கவேண்டும்.
- தொலைக்காட்சியில் கண்கவர் நிகழ்வுகளுடன், காதுக்கினிமையான நிகழ்வுகளையும் ரசிக்கலாம்.
- தொலைக்காட்சி பல நன்மைகளை நமக்கு அளிக்கிறது.
- பொது அறிவு, விஞ்ஞானத்தகவல்கள் போன்ற பலவற்றை எமக்குத் தருகிறது.
- தெளிவில்லாத பாடங்களைத் தொலைக்காட்சி மூலம் இலகுவாகத் தெரிந்து கொள்ளலாம்.
- தொலைக்காட்சியால் தொல்லைகளும் ஏற்படுகின்றன.
- வீட்டில் உள்ளவர்கள் எந்தநேரமும் தொலைக்காட்சியையே பார்க்கிறார்கள்.
- பாடசாலைப் பிள்ளைகளுக்கு வீட்டில் படிக்க முடியாதுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. கணினிப் பயன்பாடு



- தகவல் தொழில் நுட்பத்தின் மிகச்சிறந்த சாதனமாகக் கணினி விளங்குகிறது.
- கணினி உலகெங்கும் பயன்படுத்தப்படுகிறது.
- வளர்முக நாடுகளிலும் கணினிப் பயன்பாடு பரவியுள்ளது.
- இன்று எல்லாம் கணினி மயமாக்கப் பட்டுள்ளது.
- கணினியூடாக உலகிலுள்ள அனைவருடனும் தொடர்பினை ஏற்படுத்தலாம்.
- கணினியூடாக விஞ்ஞானத்தின் சாதனைகளை அறியலாம்.
- நூல்வெளியீட்டுத் துறை மிகவும் விருத்தியடைந்துள்ளது.
- கணினி மூலம் இணையதளங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
- தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி கணினியிலேயே தங்கியுள்ளது.
- கணினியைக் கண்டுபிடித்த பெருமை சார்ல்ஸ் பபேஜ் அவர்களுக்கே உரியது.
- கணினி மூலம் எந்தப்பாடங்களையும் படிக்கலாம்.
- மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெருந்துணையாக இருக்கிறது.
- கணிப்பீடுகளைச் சரியாகச் செய்து கொள்ள கணினி பெரிதும் உதவுகிறது.
- கட்டிடக்கலையின் வடிவமைப்புக்களைக் கணினிமூலம் கச்சிதமாகச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கணினி ஒரு மின்னியல் சாதனமாகும்.
- கணினியூடாக மின்னஞ்சல் தொடர்புகளைச் செய்கிறார்கள்.

## 52. வாசிப்புப் பழக்கம்



- வாசிப்பதால் ஒருமனிதன் பூரணத்துவம் அடைகிறான்.
- வாசிப்பதால் நமது அறிவு அகண்டமாகிறது.
- வாசிப்பவன் சிறந்த அறிஞனாகிறான்.
- வாசிப்பதைக் கற்றல் என்றும் கூறுவார்கள்.
- கற்றவர் என்போர் கண்ணுடையோர் எனப்போற்றப்படுகிறார்கள்.
- வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வாசிப்புப் பழக்கம் உதவும்.
- வாசிப்புப் பழக்கம் உள்ளவர்கள் தனிமையை உணரமாட்டார்கள்.
- நல்ல நூல்களைக் கண்டறிந்து அவற்றை வாசிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.
- ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் வாசிப்பது நல்ல பழக்கமாகும்.
- நல்லனவற்றைத் கூறும் நூல்கள் நமது நண்பர்களுக்குச் சமன்.
- நூல்களை வாசிப்பதால் நமது சிந்தனை விருத்தியுறுகின்றது.
- சிந்திக்கவும் உலகில் நன்றாக வாழவும் வாசிப்புப் பழக்கம் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாசிப்பினால் கல்விச் செல்வத்தைத் தேடிக்கொள்ளலாம்.
- கல்விச் செல்வம் பிறருக்குக் கொடுப்பதால் மணற்கேணிபோல் சுரந்துகொண்டிருக்கும்
- கல்விச் செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்க வேண்டுமானால் வாசிப்பில் ஈடுபடவேண்டும்.

## 53. சுனாமி




- சுனாமி என்பது யப்பானியச் சொல்லாகும்
- யப்பானில் அடிக்கடி கடற்கோளின் தாக்கம் ஏற்படுகிறது.
- கடற்கோளினால் உருவாகும் அலைகள் துறைமுகங்களைத் தாக்கின.
- துறைமுகங்களைத் தாக்கும் பேரலைகளைச் சுனாமி என யப்பானியர் அழைத்தார்கள்.
- 2004 டிசம்பர் 26ல் பெரியதொரு கடற்கோள் உலகைத் தாக்கியது.
- அன்றிலிருந்து சுனாமி என்ற யப்பானியச் சொல் சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுவிட்டது
- இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளைத் தாக்கியது.
- பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்டது.
- கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மக்கள் இன்னலில் சிக்கித் தவித்தனர்.
- இலங்கையில் சுமார் முப்பதாயிரம்பேர் உயிரிழந்தனர்.
- இலங்கையின் கடற்கரைப் பிரதேசம் அழிவுக்குள்ளானது.
- இயற்கைக் காரணிகளால் ஏற்படும் சுனாமியைத் தடுக்க முடியாது.
- ஆனால் எச்சரிக்கையாக இருந்தால் அழிவைக் குறைக்கலாம்.
- சுனாமி போன்ற பாதிப்புக்களில் இருந்து அழிவுகளைக் குறைக்கும் திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது.
- சுனாமி தந்த வடு படிப்படியாக மாறிவருகிறது.
- சுனாமி ஒரு இயற்கை அனர்த்தமாகும்.

## 54. வானவில்



- வானவில் அழகான வர்ணங்களைக் கொண்டு வானில் காட்சியாகும்.
- சற்றுநேரம் வரை மட்டுமே வானில் தெரியும்
- மழைபெய்யும் போது சூரிய ஒளிக்கதிர்கள் ஊடறுப்பதால் எதிர்திசையில் வானவில் தெரிகிறது.
- பூமியின் கோளவடிவுக்கு ஏற்ப வானவில் விரியும்.
- சூரியன் கிழக்கில் இருந்தால் வானவில் மேற்காகத் தெரியும்.
- சூரியனின் ஏழுநிறங்களும் அழகாகத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அந்த ஏழு நிறங்களையும் ஆங்கிலத்தில் "விப்ஜியோர்" என்பார்கள்
- ஆங்கிலத்தில் ஏழுநிறங்களின் முதலெழுத்துக்களை சேர்த்து வாசித்தால் "VIBGYOR" "விப்ஜியோர்" வரும்.
- தமிழில் நாம் "ஊகநீபமசெசி" எனவும் அழைக்கலாம்.
- அவை ஊதா,கருநீலம்,நீலம். பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு ஆகியனவாம்.
- மனித வாழ்க்கையையும் வானவில்லுக்கு ஒப்பிடுவார்கள்.
- வானவில் சடுதியாகத் தோன்றி மறைவது.
- வானவில்லைச் சிறுவர்கள் விரும்பி ரசிப்பார்கள்.
- ஒருவகைக் கள்ளிச் செடியின் இலையை மடித தால் அது உடையும் பகுதிப் பாலில் வானவில் தெரியும்.
- தண்ணீரின் மேல் பெற்றோலியக் கசிவு விழுந்தாலும் வானவில்லின் நிறங்களைக் காணலாம்.

## 55. ஆகாய விமானம்




- ஆகாய விமானம் மனிதனின் மகத்தான படைப்பாகும்.
- பறவையைக் கண்ட மனிதன் இறக்கையைக் கட்டிக் கொண்டு பறந்து பார்த்தான்.
- பலூன்களைச் செய்து அதில் தொங்கிப் பறந்து பார்த்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விஞ்ஞானத்தின் விந்தையினால் ஆகாய விமானத்தைக் கட்டினான்.
- ரைற் சகோதரர்களின் பெரு முயற்சிதான் ஆகாயவிமானம்.
- இன்று நவீனரக விமானங்கள் வானவீதியில் உலா வருகின்றன.
- பிரயாணத்தை ஆகாய விமானம் இலகுவாக்கி விட்டது.
- ஒரு சில மணித்தியாலங்களில் நினைத்த இடத்தைச் சென்றடையலாம்.
- ஆகாய விமானத்தில் பயணஞ்செய்வது புல்லரிக்கும் நிகழ்வாகும்.
- காதுகளில் பஞ்சை வைத்துக் கொண்டால் இரைச்சல் கேட்காது.
- ஆகாயவிமானத்துள் இருந்து யன்னல் வழியாகப் பார்த்தால் அற்புதமாக இருக்கும்.
- வானத்தில் மேகக்கூட்டங்கள் ஊடாகப் பயணிப்போம்.
- மேகக்கூட்டங்கள் ஆகாயவிமானத்தைச் சூழ்ந்து காட்சிதரும்.
- நீலக்கடல் நமக்கு மிகக் கீழே தெரியும்.

## 56. எறும்புகள்




- எறும்புகள் சுறுசுறுப்பான பூச்சி வகையுள் அடங்கும்.
- ஒரு எறும்புக்கூட்டத்தில் ஒரு இராணி எறும்பு இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இராணி எறும்புக்குப் பிறக்கும்போதே இறக்கைகள் இருக்கும்.
- அவை பறந்துபோய் புதுக்குடி அல்லது புதுக்கூட்டத்தை அமைக்கும்போது இறக்கைகள் இல்லாது போய்விடும்.
- எறும்புகள் இரண்டு முதல் ஏழு மிலிமீற்றர் நீளமுடையவை.
- ஒரு எறும்புக்கு வயிற்றில் இரண்டு அறைகள் உள்ளன.
- ஒரு அறையில் தனக்கான உணவைச் சேகரிக்கும்.
- மற்றைய அறையில் தனது கூட்டத்தாருடன் சேர்ந்து உண்பதற்காக உணவைச் சேகரிக்கும்.
- எறும்பின் மூளை ஏனைய பூச்சியினத்தைவிடவும் பெரியது.
- அதன் மூளை மகின்ரொஸ் 11 கொம்பியூட்டருக்குச் சமனானது.
- எறும்பில் தொழிலாளி, போராளி எனப் பலவகையுண்டு.
- சில எறும்புகள் ஒரு நாளைக்கு ஏழு மணித்தியாலங்கள் நித்திரை கொள்ளுமாம்.
- எறும்புகள் மஞ்சள்,சிவப்பு,கருமை எனப்பலநிறங்களில் காணப்படும்.
- சில எறும்புக் கூட்டத்தில் 700,000 எறும்புகள் வரை உள்ளனவாம்.
- எறும்புகள் தனது எடையைவிட 20 மடங்கு பாரத்தைத் சுமக்கும் வல்லமையுடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57. மாதிரி விளம்பரம் எழுதுவோம் -1



- அழகாக எழுதவேண்டுமா? ஆனந்தா பேனாவைக் கேட்டு வாங்குங்கள்.
- திறமையான மாணவர்கள் நாடுவது ஆனந்தா பேனாவையே.
- பரீட்சையில் சித்தியடைய ஆனந்தா பேனாவையே பாவியுங்கள்.
- அனைவரும் பயன்படுத்துவது ஆனந்தா பேனாவையே.

இன்றே வாங்குங்கள்.
மறவாதீர்கள்

கிடைக்குமிடம்
'சுலக்ஸ் மாளிகை'
கொழும்பு - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 58. மாதிரி விளம்பரம் எழுதுவோம் -2





- சிறுவர் விரும்பும் சீருடைகள்
- சப்பாத்து, காலணிகள்
- சிறுகுடை, தொப்பி வகைகள்
- பேனா, பென்சில் எழுது பொருட்கள்
- மனதைக் கவரும் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெறுவதற்கு
நாடவேண்டிய ஒரே இடம்

ஆனந்தா பலஸ்
கண்டி வீதி
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59. பாராட்டுக் கடிதம் எழுதுவோம் -1

12, பிரதான வீதி



திருகோணமலை
09-09-2009

அன்பான சினேகிதி


உனது 'ஸ்கொலசிப்' பெறுபேறு எனக்கு மகிழ்ச்சியை ஊட்டியது. மாவட்டத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்றமைக்காக எங்களது வாழ்த்துக்கள். நீ சித்தியடைவாய் என்று எனது அன்னையும் கூறினார். நீ உனக்கும், உனது பாடசாலைக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளாய். நாங்கள் உளமாரப் பாராட்டுகிறோம்.

நன்றியுடன்
உனது பிரியமான சிநேகிதி
அ.சுலக்ஷிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60. அழைப்புக் கடிதம் எழுதுவோம் -2



37, பிரதான வீதி
கண்டி
09-10 -2009

திரு. பால.சுகுமார்
பீடாதிபதி
கிழக்குப் பல்கலைக்கழகம்
செங்கலடி

பெருமதிப்பிற்குரிய ஐயா!

எமது கிராம கலைமன்றத்தின் நிறைவு விழாவிலே தாங்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானித்துள்ளோம். தயவுசெய்து எங்கள் அழைப்பினை ஏற்று வருகைதந்து சிறப்புரை ஆற்றுமாறு ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

தங்கள் மேலான பதிலையும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றியுடன்
தங்கள் வரவை நாடும்
அ.அச்சுதன்
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

1. இன்பக் கனிகள் - சிறுவர் பாடல்கள்
2. பாட்டுப் பாடுவோம் - சிறுவர் பாடல்கள்
3. காகமும் தம்பியும் - சிறுவர் பாடல்கள்
4. பாடி ஆடுவோம் - சிறுவர் பாடல்கள்
5. கடலும் காவேரியும் - சிறுவர் பாடல்கள்
6. சின்னச் சின்னப் பாட்டு - சிறுவர் பாடல்கள்
7. மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்கள்
8. ஆனந்தமான பாட்டு - சிறுவர் பாடல்கள்
9. சகோதரராய் வாழ்வோம் - சிறுவர் பாடல்கள்
10. ஆடி மகிழ்வோம் - சிறுவர் செயல் விளையாட்டு
11. பூஞ்சிட்டுக்கள் - சிறுவர் கதைகள்
12. சின்னத்தேவதைகள் -சிறுவர் கதைகள்
13. கண்ணனும் இராமனும். சிறுவர் கதைகள்.
14. தங்க மாம்பழம் - சிறுவர் கதைகள்
15. பளிங்குத் தீவு சிறுவர் நாவல்
16. பயங்கொள்ளலாகாது பாப்பா சிறுவர் நாவல்.
17. காட்டில் கலவரம்.- சிறுவர் நாவல்
18. உல்லாசப் பயணம் - சிறுவர் நாவல்
19. மனதில் உறுதி வேண்டும் - சிறுவர் நாவல்
20. வாக்கினிலே இனிமை வேண்டும் -இளைஞர் நாவல்
21. கேணிப்பித்தன் கவிதைகள் - கவிதைத் தொகுதி.
22. அந்த ஆவணி ஆறு சிறுகதைகள்
23. வம்மிப் பூ - சிறுகதைகள்
24. கேணிப்பித்தன் கதைக்கள்
25. அற்புதமான வானம் - சிறுவர் கதைகள்
26. சிறகு வைத்த கதைகள் - சிறுவர் கதைகள்.
27. துணிச்சல் மிக்க சுந்தரி சிறுவர் நாவல்
28. சுனாமி தந்த உறவு. சிறுவர் நாவல்.
29. ஏன் வந்தாய் - சிறுகதைகள்
30. அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை
31. கனவு மெய்ப்பட வேண்டும் - நாவல்
32. பேனாவினால் பேசுவோம் - சிறுவர் கட்டுரைகள்
33. இசையோடு அசைவோம் - சிறுவர் பாடல்கள்
34. சாதனையாளர் - சிறுவர்கதைகள்

9789559821120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... PRINTERS (PVT) LTD. TEL : 2439401, 4997221